கொழும்பிலிருந்து செய்தியாளர் நண்பர் ஒருவர் நேற்றுக் காலை தொலைபேசி அழைப்பு எடுத்தார்.
பல விடயங்களினிடையே ஒரு முக்கிய தமிழ் அரசியல் தலைவர் பற்றிப் பேச்சுத் திரும்பியது. நான் அவர் பெயரை இங்கு குறிப்பிடப் போவதில்லை. வாசகர்களின் ஊகத்துக்கே அதனை பக்கம் 02 »

பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 18 | சனிக்கிழமை 02.03.2019 | கதிர் 118



## அபிநந்தன் விடுதலை!

வாகா எல்லையில் அமோக வரவேற்பு



புதுடில்லி, மார்ச் 02
பாகிஸ்தானிடம் சிக்கிய இந்திய விமானி அபிநந்தன் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் பக்கம் 11 »

## காணாமல்போனோரின் உறவினர்களின் கதறல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்!

### சமந்தா பவர் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 2
காணாமல்போனோரின் உறவினர்கள் காணாமல் போன தமது சொந்தங்களின் புகைப்படங்களுடன் தற்போதும் வீதியில் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கதறல்களுக்கு நீதி கிடைக்க பக்கம் 11 »

## ஜெனீவாவுக்குச் செல்வதை தவிர்க்கின்றது அரச தரப்பு

கொழும்பு, மார்ச் 02
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு இலங்கையில் இருந்து அரச குழு ஜெனீவாவுக்குச் செல்லாது என்ற வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தற்போதைய கூட்டத் பக்கம் 11 »

### தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு வீண்

# இலங்கைக்கு மேலும் 2 வருடம் அவகாசம்!

### ஜெனீவாப் பிரேரணை வரைவு வெளியாகியது

ஜெனீவா, மார்ச் 02
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் காலஅவகாசம் வழங்கும் வகையிலான பிரேரணை முன்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொண்டிநீக்ரோ ஆகிய நாடுகள் இணைந்து எதிர்வரும் 20 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணையைச் சமர்ப்பிக்கவுள்ளன.
பக்கம் 11 »

## இந்தியா திரும்பியவுடன் அபிநந்தனிடம் விசாரணை!

புதுடில்லி, மார்ச் 02
இந்திய விமானப்படையின் விமானி விங் கொமண்டர் அபிநந்தன் பாகிஸ்தானில் நடத்தப்பட்ட விதம் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட் பக்கம் 11 »

### இம்ரான்கானுக்கு நோபல் பரிசு!

## வலுக்கிறது பேராதரவு இலங்கையர்களும் பாராட்டு



கொழும்பு, மார்ச் 02
பிரதமர் இம்ரான்கானுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கவேண்டும் என்று பாகிஸ்தானில் கோரிக்கை எழுந்துள்ளது. பக்கம் 11 »

## நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்ப்பு

### மு.காவும் போர்க்கொடி



கொழும்பு, மார்ச் 02
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்குத் தாம் எதிர்ப்பை வெளியிடுவதாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ பக்கம் 11 »

## செம்மணியில் திடீரென முளைத்த சிவலிங்கத்தால் பெரும் பரபரப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 02
யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் புதிதாக வைக்கப்பட்டுள்ள சிவலிங்கம் ஒன்றினால் பக்கம் 11 »

## மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் கட்டாயம்

### இலங்கையை வலியுறுத்துகிறது அமெ.



ஜெனீவா, மார்ச் 02
மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தங்கள் செயல்களுக்கு பொறுப்புகூறவேண்டும் என ஐ.நா. பக்கம் 11 »

## அரசைப் பாதுகாக்கும் தரப்புக்கு கொடுக்கும் லஞ்சம் 'கம்பரலிய'

### டக்ளஸ் எம்.பி. சாடல்



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 02
'கம்பரலிய' எனும் கிராம எழுச்சி திட்ட பக்கம் 11 »

## வடக்குப் பாடசாலைகளுக்கு செவ்வாயன்றும் விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 02
சிவராத்திரி தின சமய அனுஷ்டானங்களை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நலன் கருதி சிவராத்திரி தினத்தின் மறுநாள் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை தினமாக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பக்கம் 11 »

## நோர்வே அமைச்சர் இலங்கை வருகிறார்!



கொழும்பு, மார்ச் 02
நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மரியான் ஹேகன் இரண்டுநாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக எதிர்வரும் பக்கம் 11 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# அதிகாரப் பரவலாக்கத்தையாவது உடனடியாகச் செய்வதற்கு முடிவு

## கண்டிக் கூட்டத்தில் நேற்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் விளக்கம்



"நாங்கள் ஆட்சிக்கு வரும் போது இந்த அரசமைப்பை மாற்றுவோம் என உறுதியளித்தோம். அதன் ஒரு பகுதியை 19 ஆவது திருத்தத்தின் ஊடாகச் செய்தோம். ஆனால் இப்பொழுது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையையோ நாடாளுமன்றத் தேர்தல் முறைமையையோ மாற்றுவதற்குக் கால அவகாசம் போதாது. அவ்வாறு செய்யபோனால் எல்லாம் குழம்பிபோகலாம். அதனால் அதிகாரப் பரவலாக்கத்தையாவது உடனடியாகச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

–இவ்வாறுஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஆயிரம் கிராமங்களை மையப்படுத்தி அமைச்சரின் எண்ணக்கருவில் உருவான 'பிரஜா ஜல அபிமானய' என்ற கருத்திட்டத்தின் அங்குரார்பண நிகழ்வைக் கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேசத்தில் கலத்த என்ற கிராமத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சமகாலத்தில் 25 மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அமைச்சர் ஹக்கீம் உரையாற்றும்போத. மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"அதிகாரப் பகிர்வு என்ற கோரிக்கையுடன் 30 ஆண்டு கால யுத்தத்தில் சிக்கிக் கொள்ள நேர்ந்துவிட்டது. யுத்தத்தின் போதும் தமிழ் மக்கள் கேட்டது இவ்வாறான அரசமைப்புத் திருத்தத்தை அல்ல. முறையான அதிகாரப் பகிர்வைதான்.

தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை நிவர்த்திப்பதற்கு எங்களால்எவற்றையாவதுசெய்திருக்க முடியும். குறிப்பாக இந்தப் புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் வழிநடத்தல் குழுவின ரான எங்களிடம் முதலமைச் சர்கள் அபிப்பிராயங்கள்தெரிவித்தபோது, வடக்கைவிட தென்னிலங்கையில் உள்ளவர்கள் தான் அதிகாரபரவலாக்கத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கவேண்டுமெனக் கோரினர். அவர்களால் முன்வைக்கப் பட்டவற்றில் நாம் சிலவற்றை ஏற்றுக் கொண்டோம். குறைந்த பட்சம் எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியயோசனைகளில் இணக்கப்பாட்டுக்கு வர முடிந்தது. 30 ஆண்டுகால கோர யுத்தத்தினால் கைவிடப்பட்டுப் போன பிரச்சினைகளை வெறுமனே புறந்தள்ளிவிடமுடியாது. நேற்றும் கட்சிதலைவர்களான நாங்கள் ஜனாதிபதியை சந்தித்து இது குறித்து உரையாடினோம்.

எதிர்க்கட்சியினர் விகாரைகள் தோறும் சென்று நாங்கள் இந்நாட்டின் ஒருமைபாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கப்போகிறோம் எனக் கூறித் திரிகின்றனர். பௌத்தசமயத்துக்குரியமுதன்மை அந்தஸ்தை இல்லாமல் செய்ய எத்தனிக்கிறோம் எனவும் அவர்கள் கூறிவருகின்றனர். அவைமுற்றிலும்பொய்யானவை. அதிகாரப் பரவலாக்கத்தை மேலும்விரிவுபடுத்தப் போகின்றோம். அதன் மூலம் குறைந்தபட்சம் கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றையாவது. நிறைவேற்ற முடியும். ஜனாதிபதியிடம் நான் இதனைக் கூறியபோது அதையாவதுசெய்வோம் எனஅவரும் ஏற்றுக்கொண்டார். அதன்படி அடுத்த கிழமைக்குள் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசித் தீர்மானம் ஒன்றுக்கு வர ஜனாதிபதி உடன்பட்டார். – என்றார்.

இந்நிகழ்வில் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் ராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்த்தன, இராஜாங்க அமைச்சின் செயலாளர் கே.என். மங்கலதிஸ்ஸ, தேசியசமூகநீர்வழங்கல்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயதிலக்க ஹேரத் ஆகியோர் உட்படப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு விடுகிறேன்.

*"என்ன அண்ணே அந்த மனுசன் முந்தி இதோ போராட்டம் வெடிக்கும், அதோ போராட்டம் வெடிக்கும் எண்டு' முழங்கிச்சுது.... பிறகு கொஞ்சக் காலம் காணி விடுவிப்பு, காணிவிடுவிப்பு எண்டு அந்தப் புராணம் பாடிச்சுது... இப்ப அதையெல்லாம் விட்டுப் போட்டு, எதை நாங்கள் பேசினாலும் கடைசியிலை கதையைக் கொண்டு போய் கம்பரெலியத் திட்டம் எண்டு போய் முடிக்குது... 'அங்க இவ்வளவு நிதி கொடுத்தனாங்கள், இங்கை இவ்வளவு வீதி அமைச்சனாங்கள், இந்த இடத்திலை பாலம் கட்டினாங்கள்' எண்டு இப்ப கம்பரெலிய வட்டத்துக்குள்ளதான் முழுசா நிக்குது.... தமிழீழக் கனவு கடைசியாகச் சுருங்கி 'கம்பரெலிய' கணக்குக்குள்ள முடிஞ்சிட்டுது போலை...."*

– என்றார் என் நண்பர்.

*"அதுதான் ரணிலின் நரித் தந்திரம்"* – எனக் கிண்டலாகப் பதில் கூறினேன் நான்.

*'கம்பரெலிய'* ஒதுக்கீட்டில் உரிமைக் குரலை அடக்கிவிட்டார் ரணிலார் என்று என் மனதில் தோன்றியது.

*"வழக்கமாய்ப் போராட்டங்களில் முன்னுக்கு நிக்கிறவர்... இப்ப அதுகளிலையும் தலையைக் காட்டக் காணோம்...."* – என்றார் நண்பர்.

*"வயது போய்விட்டதல்லவா? அதுதான் தன்ரை பிரதிநிதியாய்த் தவறாமல் மகனை அனுபிறவர் தானே...!"* – என்றேன்.

*"மகனை முன்னுக்குக் கொண்டு வார திட்டம் போல இது..."* – என்றார் என் கொழும்புப் பத்திரிகை நண்பர்.

*"இருக்கலாம்"* என்று கூறிச் சமாளித்தேன் நான்.

★ ★ ★ ★

'அரசமைப்பு மாற்றம்' குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அழைத்திருந்தார் அல்லவா?

அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கும் சம்பந்தனுக்கும் இடையில் மோதல், முறுகல் நிலை நிலவியமை போன்ற ஒரு செய்தி சில ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அது சுமந்திரன் தரப்பைச் சீற்றமுற வைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஏதோ ஒருவகையில் இந்த நாடாளுமன்றத்தின் காலத்திலேயே – குறைந்த பட்சம் அதிகாரப் பரவலாக்கலுக்கான அரசமைப்புத் திருத்தங்களையாவது – கொண்டு வந்து நிறைவேற்றி விட வேண்டும் என்று கருதி, மிகக் கஷ்டப்பட்டு, சம்பந்தன் சில அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க ஆரம்பித்தால், தொடக்கத்திலேயே அதனைச் சாண் ஏற முழம் சறுக்கப் பண்ணும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றதோ என்ற சந்தேகம் தமிழ்ப் பிரதிநிதிகள் மத்தியில் எழுந்திருக்கின்றது.

கொஞ்சம் ஊடுருவி விசாரித்துப் பார்த்ததில் செய்தி வெளியிட்ட ஊடகங்கள் திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றோ அந்த மாதிரியான செய்தியை வெளியிடவில்லை என்பது உறுதியானது.

மேற்படி ஜனாதிபதி கூட்டிய கூட்டத்தில் பங்குபற்றிய சில தரப்புகளே இத்தகவலை – கயிறை – அந்த ஊடகங்களுக்கு வேண்டுமென்றே கொடுத்திருக்கின்றன என்பதும் அறிய வந்தது.

இதுவிடயத்தில் சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் எதிர் வீட்டுக்காரன் குறித்து எச்சரிக்கையாக இருப்பதை விடுத்து தமது பக்கத்தில் இருக்கிறார்கள் என்று கருதிக் கொள்ளும் அடுத்த வீட்டுக்காரன் குறித்து உஷாராக இருப்பது நல்லது....!

**- மின்னல் -**

### ஜே.வி.பி. பிரமுகர் லால் காந்தா கைது

மது போதையில் வாகனம் செலுத்தி விபத்தொன்றை ஏற்படுத்திய குற்றத்தின் பேரில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி. லால்காந்த அநுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பயணித்த கெப் வண்டி, மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் மீது மோதியுள்ளதாகக்கூறப்படுகின்றது.

இவ்வாறு விபத்துக்குள்ளானவர்களில் ஒருவரின் நிலைமை ஆபத்தானதாகவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## நெல் அறுவடை நிகழ்வை நேற்று மஸ்தான் எம்.பி ஆரம்பி வைத்தார்



வவுனியா, மார்ச் 02

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கன்னாட்டி கணேசபுரம் பகுதியில் நவீன நெல் விதைக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி விதைக்கப்பட்ட வேளாண்மையை அறுவடை செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மீள் குடியேற்றம் புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னால் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான், ஹார்வஸ்டர் இயந்திரத்தைத் தாமே இயக்கி வைபவ ரீதியாக அறுவடையை நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலர் எஸ். சிவகரன், வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு உள்ளிட்ட அதிகாரிகளுடன், விவசாயிகள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## மைத்திரி, ரணில், மஹிந்தவை சந்தித்தார் இந்தியத் தூதுவர்!

கொழும்பு, மார்ச் 02

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை நேற்று அவசர மாகச் சந்தித்தார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக விளக்கும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் இடையில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான எந்தப் பிரச்சினைகளும் இல்லை என இந்தியத் தூதுவர் மூவரிடமும் கூறியுள்ளார். (ஐ)

## சர்வகட்சிக் குழுக் கூட்டத்தை ஜே.வி.பி. புறக்கணித்தது ஏன்?



கொழும்பு, மார்ச் 02

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வகட்சிக் குழுக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பங்கேற்கவில்லை. தமது கட்சி இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தீர்மானம் எடுத்துள்ள தாக அந்தக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்றஉறுப்பினருமானஅநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக சர்வகட்சிக் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமை தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவரிடம் கேட்டபோது –

எமது கட்சி இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தீர்மானம் எடுத்துள்ளது. இதனை மாத்திரமே இப்போது சொல்ல முடியும் என்று பதிலளித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் 20ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### தமிழ்த் தேசிய மகளிர் முன்னணியின் மகாநாடு நாளை யாழ். நகரில்

யாழ்ப்பாணம், மார்ச் 02

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ( அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) மகளிர் அணியின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மகளிர் மாநாடு மிக எழுச்சியுடன் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசத்துப் பெண்களொடுக்குமுறையில் இருந்து விடு பட்டுச் சம உரிமையுடன்வாழவலுச் சேர்க்கும்வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என முன்னணியின் மகளிர் அணி அறிவித்துள்ளது. (இ)

**அர்ச்சனா வெல்டிங் வேக்ஸ்**

அனைத்துவிதமான வெல்டிங்வேலைகளும் உரிய தவணையில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு – சூட்டி (0759495917) கொக்குவில்.

# திருக்கோணேஸ்வரர் வளாகத்தில் சிவலிங்கம் உடைப்பால் பதற்றம்!

## புத்தர் சிலை வைப்போம் எனச் சிலர் மிரட்டல்



திருகோணமலை, மார்ச் 02

திருகோணமலை - திருக்கோணேஸ்வரம் கோயிலுக்குச் செல்லும் வழியில் சிவலிங்கம் சிலை அமைக்கப்பட்டால் அதே இடத்தில் புத்தர்சிலை அமைப்போம் எனக்கூறிச் சிங்கள மக்கள் முரண்பட்டு வருகின்றமையால் அந்தப் பகுதியில் நேற்றுக் காலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சிவராத்திரி முடியும் வரை அந்த இடத்தில் சிவலிங்கத்தை வைப்பதற்கு கோயில் நிர்வாகத்தினர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுவதாகக் கூறப்பட்டது.

சிவராத்திரியை முன்னிட்டு, திருகோணமலை – திருக்கோணேஸ்வரம் கோயிலுக்குச் செல்லும் வழியில் கோயில் நிர்வாகத்தினர் சிவலிங்கமொன்றை நிறுவினர். நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்தச் சிலை நிறுவப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை அந்தச் சிலை உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்த கோயில் நிர்வாகத்தினர், பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில், சிவலிங்கத்தை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளே உடைத்தார்கள் என அந்தப் பகுதியில் உள்ள கடையின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த விடயம் தொடர்பாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தனர்.

அத்தோடு இந்த இடம் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியதென்றும் அவர்கள் கூறினர்.

இதனையடுத்து சிவராத்திரி முடியும் வரை அந்த இடத்தில் சிவலிங்கத்தை வைப்பதாகக் கூறி, கோயில் நிர்வாகத்தினர் சிலையை வைக்க முற்பட்டனர். எனினும், அவ்வாறு சிவலிங்கத்தை வைத்தால் புத்தரின் சிலையை வைப்போம் எனக் கூறி அங்குள்ள சிங்களவர்கள் முரண்பட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிறுப்பிட்டியில் உள்ள விடுதி மீது உடனடி நடவடிக்கை வேண்டும்

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 02

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சிறுப்பிட்டிப் பகுதியில் இயங்கும் விடுதியில் கலாசாரச்சீரழிவுகள் இடம்பெறுகின்றமை தொடர்பில்முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உடனடிநடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷினாலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சிறுப்பிட்டியில் இயங்கும்விடுதி பிரதேச சபை உள்ளிட்ட அதிகார நிறுவனங்களிடம் எந்தவிதமான அனுமதியும் பெறப்படாமல் இயங்கி வருகின்றது.

இந்த விடுதியில் கலாசார பிறழ்வுகளை ஏற்படுத்தும், சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என அந்தப் பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

சமூகத்துக்கு ஒவ்வாத நடத்தைகள் அந்த விடுதியில் நடக்கின்றமையைஅடுத்து விடுதி உரிமையாளரிடம் சென்று அப்பகுதி மக்கள் நியாயம் கேட்ட போது, விடுதியில் நடைபெறும் அனைத்தும் பொலிஸாரின் அனுமதியுடன் நடப்பதாக அவர் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் வலி. கிழக்குப் பிரதேச சபை ஊடாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் எந்த விதமான நடவடிக்கையையும் பொலிஸார்மேற்கொள்ளவில்லை. அந்தப்பகுதி மக்களின் நலனை கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த காங்கேசன்துறைபிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இந்தப் பிரச்சினை தொடர்பில் என்னிடத்தில் முறைப்பாட்டை முன்வையுங்கள். எனக்கு உரியவாறு முறைப்பாட்டை வழங்கினால் ஒரு வாரத்துக்குள் விடுதியின் அனுமதி மற்றும் அங்கு நடைபெறும்செயற்பாடுகள்தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார். (ஐ-07)

# கரன்னகொடவுக்கு எதிராக விரைவில் குற்றப் பத்திரம்!



கொழும்பு, மார்ச் 02

கொழும்பில் 2008-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கில், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு எதிராக விரைவில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் நடந்த விசாரணையின்போது, மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் விராஜ் தயாரத்ன இதனைத் தெரிவித்தார்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தம்மைக் கைது செய்வதற்கு முயற்சிக்கின்றனர் என்றும், அதனைத் தடுத்து நிறுத்தும்இடைக்காலஆணையைப் பிறப்பிக்குமாறும் கோரி அட்மிரல் வசந்த கரன்னகொட உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று முன் தினம் தலைமை நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட அமர்வினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த மனு மீதான பரிசீலனையில் இருந்து விலகிக் கொள்வதாக நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன அறிவித்தார்.

இதையடுத்து, இந்த அடிப்படை உரிமை மனுவை மார்ச் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதென நீதியரசர்கள் முடிவு செய்தனர்.

இந்த விசாரணைகளின் போது, சட்டமா அதிபரின் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, கொழும்பில் 2008-2009 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு எதிரான விசாரணைகள் முடிந்துவிட்டன என்றும், அவருக்கு எதிராக விரைவில் கொழும்பு மேல்நீதிமன்றத்தில்குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ)

# ஹரோ மேயர் கரீமா மரிக்காரை பதவி விலகக் கோரி போராட்டம்



லண்டன், மார்ச் 02

ஹரோ மேயர் கரீமா மரிக்காரை பதவி விலகு மாறு கோரி பிரிட்டன் வாழ் தமிழர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

லண்டனிலுள்ள ஹரோ நகரசபை அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் மாலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டிருந்த ஹரோ மேயர், இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க மற்றும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ ஆகியோரைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புகளின் போதான ஒளிப்படங்களை அவர் தனது பேஸ்புக் வலைத்தளத்திலும் பதிவிட்டிருந்தார்.

கடந்த ஆண்டு இலங்கையின் சுதந்திர தினத்தன்று லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக தமிழர்களின் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த புலம்பெயர் தமிழர் உள்ளிட்ட தரப்பினரை நோக்கி கழுத்தை அறுக்கும் சைகையைக் காண்பித்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ சர்ச்சைக்குள்ளாகியிருந்தார்.

இந்தநிலையில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ உள்ளிட்டவர்களைச் சந்திக்க சென்ற ஹரோ மேயர் கரீமா மரிக்கார், மேயருக்கான உத்தியோகபூர்வ உடையில் சென்றுள்ளார். இந்த செயலானது அதிகார துஷ்பிரயோகமாகப் பார்க்கப்படுகின்றது. இதனால் மேயர் கரீமா மரிக்கார் பதவி நீக்கப்படவேண்டும் அல்லது பதவி விலகவேண்டும் என கோரி பிரிட்டன் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# அட்டகாசம் செய்த 34 மாணவர் கைது

கொழும்பு, மார்ச் 02

கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மகளிர் கல்லூரியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து பட்டாசுகளைக் கொளுத்தி, அங்கிருக்கும் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த 34 மாணவர்களைக் கைதுசெய்துள்ளோம் என கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் தெரி வித்தனர்.

கல்கிஸை மற்றும் பம்பலப்பிட்டிப் பிரதேசங்களைச்சேர்ந்த இரு பாடசாலைகளின் மாணவர்களே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## இந்திய - பாக். உறவு

பாகிஸ்தான் படைகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட இந்திய விமானப் படை விமானத்தின் விமானி அபிநந்தனை உடனடியாகவே விடுவிக்கும் பாகிஸ்தானின் தீர்மானம், இந்தப் பிராந்தியத்தில் ஏற்பட்ட போர்ப் பதற்றத்தைக் குறைப்பதற்கு மிகவும் பொருத்தமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

யுத்த விளிம்பு வரை சென்றிருக்கும் இந்திய, பாகிஸ்தான் அரசுக் கட்டமைப்புகளின் நிலைமை குறித்து இந்தப் பத்தியில் நேற்றுமுன்தினமும் குறிப்பிட்டிருந்தோம்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று இந்தியா.

சரியோ, பிழையோ இந்தியா சுதந்திரமடைந்த காலம் தொட்டு – 1947 முதல் – கடந்த 72 ஆண்டுகளாக இந்திய அரசின் கொள்கைகளையும், தீர்மானங்களையும், முடிவுகளையும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுகளும், அரசுத் தலைமைகளுமே தீர்மானித்து வந்தன.

இந்திய இராணுவமும் ஏனைய படைகளும் இந்திய அரசுக் கட்டமைப்புக்குள் ஓர் அங்கமாக இருந்தாலும், அரசின் முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் மூலமாகவும் அவை செயற்படவேயில்லை.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசுத் தலைமைக்கும், அரசுக்கும் முழு அளவில் கட்டுப்பட்ட இராணுவம் உட்பட்ட முப்படைகளைக் கொண்டிருக்கும் முழு அளவிலான ஜனநாயக நாடு என்ற பெருமையை உடையது இந்தியா.

ஆனால், பாகிஸ்தானில் நிலைமை அதுவல்ல. பாகிஸ்தான் சுதந்திரமடைந்த காலம் தொட்டு எந்த ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட எந்த அரசுகளோ, அரசுத் தலைமைகளோ நிலைத்து நிற்க முடியாத அளவுக்கு அனைத்து விடயங்களிலும் இராணுவத் தலையீடு ஆக்கிரமிப்பாகவே இருந்து வந்திருக்கின்றது.

இராணுவத்தை மீறி, ஜனநாயக ரீதியில் தெரிவான அரசுகளை கொண்டு நடத்த முயன்ற அரசுத் தலைவர்கள் எல்லோரும் இராணுவப் புரட்சி மூலம் பதவியிலிருந்தும் சில சமயங்களில் உலகில் இருந்துமே அகற்றப்பட்டனர். இராணுவ சதிப் புரட்சி மூலம் அதிகாரத்துக்கு வந்த இராணுவத் தளபதிகளே பல பத்தாண்டுகள் ஆட்சியைக் கொண்டு நடத்தியிருக்கின்றார்கள்.

அண்மைக் காலத்தில் அங்கு ஜனநாயக ரீதியில் ஆட்சிப் பீடத்துக்கு வந்த எந்தத் தலைவரும் தமது முழு ஆட்சிக் காலத்தைப் பூர்த்தி செய்யவே முடியவில்லை என்ற அளவுக்கே நிலைமை இருந்து வருகின்றது.

இந்தச் சமயத்திலேயே முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் பாகிஸ்தானில் புதிய பிரதமராகப் பதவியேற்றார்.

அயல் தேசத்தில் பரம வைரியாக மதிக்கப்படும் இந்தியாவுடன் சமாதானமாகப் போக – சமரசம் செய்ய – தாம் விரும்புகின்றார் எனத் தாம் பதவியேற்ற நாள் முதல் பல தடவைகள் அவர் அறிவித்து வந்துள்ள போதிலும், அந்த அறிவிப்புகள் வெளியான சமயங்களில் எல்லாம், அந்த சமரச முயற்சிகளை முறியடிக்கும் விதத்திலான சம்பவங்கள் இரு நாட்டு எல்லைகளில் இடம்பெற்று, நிலைமை தலைகீழாகக் குழம்பி வந்தமையையே நாம் கண்டோம்.

பாகிஸ்தான் அரசுத் தலைமையை மீறிச் செயற்படும் படைகள் சமாதான விரோத நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன என்றும் –

பாகிஸ்தான் தரப்பின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய வலிமையான ஜனநாயகத் தலைமை இல்லை என்றும் –

இந்தியத் தரப்பினால் கூறப்பட்டு வந்தது.

ஆனால், இராணுவத் தரப்பினால் கைது செய்யப்பட்ட இந்திய விமானி அபிநந்தனை விடுதலை செய்யும் தீர்மானத்தை குறுகிய காலத்துக்குள் எடுத்து அதனை நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்தமை மூலம் தனது ஆட்சி அதிகாரத்தின் செல்லுபடி தன்மையை ஓரளவு நிரூபித்திருக்கின்றார் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்.

அத்தகைய ஜனநாயகத் தலைவர் ஒருவரின் செல்வாக்கும், அதிகாரமும் பாகிஸ்தானில் உறுதியாகின்றமைக்கு வழி செய்யும் பிரதிபலிப்புகளை பாரதத் தரப்பு காட்டுவதன் மூலம், எதிர்காலத்தில் இந்தப் பிராந்தியத்தின் சமாதானத்தை ஜனநாயக அரசுகளின் தலைமையின் கீழ் தீர்மானிக்கும் சூழ்நிலைக்கு வித்திட வழி செய்யலாம்.

பாகிஸ்தானில் ஜனநாயக அதிகாரத் தலைமை தனது பிடியை ஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்துவதே இந்தப் பிராந்தியத்தில் சமாதானமும், அமைதியும், நல்லிணக்கமும் உருவாவதற்கான முதலாவது அடிப்படையாகும்.


இந்திய விமானி அபிநந்தனை அவரைப் பிடித்த கையோடே விடுவிக்கும் முடிவை எடுத்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் செயல் அந்தத் திசையில் ஓர் ஆக்கபூர்வமான சமிக்ஞை.

சமாதானத்துக்கான அந்தக் கரத்தை கைப்பற்றி சாதகமான பதில் பிரதிபலிப்புகளை பாரதம் வெளிப்படுத்துவது, இரு நாட்டினதும் ஜனநாயகத் தலைமைகள் இரு நாட்டு உறவு விவகாரத்தைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான ஓர் ஆரம்பப் புள்ளியாகவும் அமையும்.

பரம வைரித் தனத்துடன் – காலாதிகால எதிர்ப்புணர்வுடன் – விடயங்களை அணுகுகின்றமையை விடுத்து, புதிய நட்புறவுச் சூழ்நிலையில், இரு தரப்புகளும் பரஸ்பரம் விட்டுக் கொடுப்புடன் செயற்பட முன்வந்தால், எல்லை தாண்டிய பயங்கரவாதம் தொடக்கம் சகல தீமைகளையும் ஒழிக்கும் வாய்ப்புக் கிட்டக்கூடும். செய்வார்களா இரு நாட்டுத் தலைவர்கள்?

# யுத்தம் எம் மீது திணிக்கப்பட்டதே அன்றி அதை நாம் வலிந்து கையிலெடுக்கவில்லை

## டக்ளஸ் எம்.பி சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 02

கடந்த காலத்தில் யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டதே தவிர அதை எமது இனம் திட்டமிட்டு மேற்கொண்டதாக எவரும் கூறிவிட முடியாது. ஆனாலும் அந்தப் போராட்டத்தை இதர தமிழ்த் தரப்பினர் தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் கனிந்துவந்திருந்த சந்தர்ப்பங்களிலும் கைவிடாது தொடர்ந்தும் முன்னெடுத்து போராட்டத்தைத் தவறான வழிமுறைகளூடாக முன்னெடுத்தமையே தமிழ் மக்களது இந்த அவலங்களுக்கும் துயரங்களுக்கும் காரணம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களது அரசியல் அதிகாரங்களைப் பெற்றவர்களால் எமது மக்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் என்றோ தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் அதைக் கடந்த காலங்களில் தத்தமது சுயநலன்கள் சார்ந்ததாகத் தமிழ் அரசியல் தலைமைகள் மாற்றிக் கொண்டமையால்தான் அவை தீராப் பிரச்சினைகளாக இன்று வரை நீடித்து வருகின்றன.

எமது கட்சிக்கு தமிழ் மக்கள் வழங்கும் அரசியல் அதிகாரங்கள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களுக்கானதாகவே இருந்திருக்கின்றன. கடந்த காலங்களில் எமக்கு கிடைத்த சொற்ப அதிகாரங்களைக் கொண்டே எத்தனையோ பல விடயங்களை மக்களுக்காகச் சாதித்துக் காட்டியிருக்கின்றோம்.

ஆனால் அந்த அதிகாரங்கள் எமக்கு அதிகளவான பலமானதாக இருந்திருக்குமேயானால் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் அரசியல் மற்றும் அபிவிருத்தி சார் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை என்றோ பெற்றுத் தந்திருப்பேன்.

தமிழ் மக்கள் தமது அரசியல் அதிகாரங்களை யாரிடம் கொடுத்தால் தமது எதிர்காலம் நிரந்தரமாக உறுதிமிக்கதாக அமையும் என்பதில் தெளிவு பிறந்துள்ளதைக் காணமுடிகின்றது. இந்த தெரிவு இம்முறை எமக்கானதாக அமையப்பெறும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

தற்போது நாட்டில் ஏதோ ஒரு தேர்தல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றமையால் இதர தமிழ் அரசியல் தரப்பினரும் வெற்றுக் கோசங்களுடன் போலித் தேசியம் பேசியபடி மறுபடியும் தமிழ் மக்களை ஏமாற்ற ஆரம்பித்துவிட்டனர்.

அத்தகைய ஓர் அரசியல் பலத்தைத் தமிழ் மக்கள் எமக்கு இம்முறை வழங்குவார்களேயானால் ஒருபோதும் நாம் தென்னிலங்கை அரசுகளை குறைகூறவோ அன்றி அதிகாரங்கள் கிடையா என்றும் வெற்றுக் கதைகள் பேசி கிடைத்த சந்தர்ப்பத்தை வீணடித்துக்கொண்டிருக்கவோ போவதில்லை.

நிச்சயமாக மக்களால் எமக்கு வழங்கப்படும் அந்த அதிகரித்த அதிகாரங்களை கொண்டு கிடைக்கின்ற சந்தர்ப்பங்கள் அனைத்தையும் எமது மக்களுக்கானதாக மாற்றியமைத்து தீரா பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மிகவிரைவில் பெற்றுத் தருவோம் – என்றார்.

(ஐ - 07)

# இரண்டு பாடசாலைக் கட்டடங்களை மாணவர்களிடம் கையளித்த ஆளுநர்



யாழ்ப்பாணம், மார்ச் 02

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரு பாடசாலைக் கட்டடங்கள் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முற்பகல் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஆரம்ப கற்றல்வள நிலைய கட்டடத் தொகுதி மற்றும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதிபர் விடுதி, சிற்றுண்டிச்சாலை என்பன ஆளுநரால் திறந்துவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆளுநர் உரையாற்றுகையில் –

கல்வியினால் மட்டும் அடையாளம் காணப்பட்ட சமூகம் நாங்கள். உடைந்து போயுள்ள நம் தேசத்தின் கல்வி தற்போது விழுந்து போயுள்ளது. அதனை நாங்கள் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல மீண்டும் நம் இலக்கை அடைய நாம் அனைவரும் கைகோர்த்து ஒன்றுபட்டு செயற்படவேண்டும். ஏனெனில் எமது எதிர்காலத்தின் நம்பிக்கையான இந்த மாணவச் சந்ததியினரை நாட்டின் சிறந்த பிரஜைகளாகச் சரியான வழிகாட்டலின் மூலம் கல்விப் பாதையில் பயணித்தால் மட்டுமே நாம் முன்னேறலாம்.

எனவே இந்த வடக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த கல்வியையும் நாம் அனைவரும் பாகுபாடின்றி ஒன்றிணைந்தால் முன்னேற்ற முடியும்.

இன்று சர்வதேச பாகுபாடுகள் ஒழிப்பு தினமாகும். இந்தக் கல்வியை அதிகாரத்திற்கு பயன்படுத்தாது நாம் சேவைக்காக பயன்படுத்தவேண்டும். சேவையின்போது பாகுபாடு இல்லாது கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதன் மூலம் வடக்கு மாகாணத்தை முதலிடத்திற்கு கொண்டுவருவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் – என்றார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் உள்ளிட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

## தம்மாலோக தேரர் விடுதலை

கொழும்பு, மார்ச் 02

அனுமதிப்பத்திரமின்றி யானைக் குட்டியொன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய வழக்கிலிருந்து, உடுவே தம்மாலோக தேரர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்தது. (ஐ)

## நாளை

03.03.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப 11.09 வரை
திதி : துவாதசி பி.ப 3.57 வரை
சுபநேரம் : 9.27 – 10.57 வரை
இராகுகாலம் : 4.57 – 6.27 வரை

# மக்களின் காணிகளை உடனே விடுவியுங்கள்!




வவுனியாவில் கையெழுத்துப் போர்



வவுனியா, மார்ச் 02

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பொது மக்களின் காணிகளை ஒப்படைக்க வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடந்தது.

யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் நிறைவடையும் நிலையிலும் மக்களின் காணிகள் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை.

ஜனாதிபதி பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என உறுதிமொழி வழங்கியபோதும் இன்றும் பல காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ளன.

காணியை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு போன்ற பகுதிகளில் மக்கள் ஒரு வருடத்துக்கு மேலாகத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். இந்நிலையில் உடனடியாகப் பொதுமக்களின் காணிகளை விட்டு இராணுவம் வெளியேறவேண்டும் என வலியுறுத்தி வடக்கு – கிழக்குப் பகுதிகளில் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

அதன் ஒருகட்டமாக வவுனியாவிலும் கையெழுத்து பெறும் நடவடிக்கை இடம்பெற்றது. இதில் பலரும் கலந்து கொண்டு இராணுவம் வெளியேறி மக்களது காணிகளை ஒப்படைக்கவேண்டும் எனத் தமது கையொப்பங்களைப் பதிவு செய்தனர். (ஐ - 100)

## சுவிஸ் அரசின் பிரதிநிதி ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 02

சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் சமஷ்டி தொடர்பான திணைக்களத்தின் சிரேஷ்ட ஆலோசகர் மார்ட்டின் ஸ்ரர்சிங்கர் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று நண்பகல் ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண மக்களின் தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், வடக்கு மக்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

வடமாகாணத்தில் நிலவும் காணி, நீர்,



வீடு மற்றும் இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகள் குறித்தும் இதன்போது மேலும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியா வைத்தியசாலையில் அம்மாச்சி உணவகம் திறப்பு



வவுனியா, மார்ச் 02

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வடக்கின் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை நலன்புரி சங்கம், வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களம், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ப.பசுபதிராஜா, பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன், வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியர்கள், பிராந்திய சுகாதார திணைக்கள ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 100)

## இன்றும் நாளையும் மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 02

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில் -**

ஈவினை, சுதந்திரபுரம், குட்டியபுலம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் முல்லைத்தீவு நகரம், உன்னாப்பிலவு, கள்ளப்பாடு, செல்வபுரம், கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

மடுக்கந்தை, மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில் -**

நீராவிபுரம், கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும்,

**நாளை ஞாயிற்றுக்கிழமை** காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில் -**

இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, GPS றோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி கிளிகடை வரை, பூங்கனிச் சோலை, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை ஆகிய இடங்களிலும் -

**கிளிநொச்சி பிரதேசத்தில்**

புதுகக் காடு, இயக்கச்சி, கோவில் வயல், சங்கத்தார்வயல், Wind Power Plant › Beta, Vallimunai Wind Power Plant ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில் -**

நீராவிபுரம், கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வைத்தியசாலையிலிருந்து நோயாளர் வீடுதி செல்வதற்கு அம்புலன்ஸ் சேவை

### வவுனியாவில் நேற்று ஆரம்பம்

வவுனியா, மார்ச் 02

வடக்கு மாகாணத்தில் முதல் முறையாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர்களை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுவதற்கான அம்புலன்ஸ் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

சிவில் தர்மவர்த்தன பவுண்டேசன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் சேவையானது முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ளது. போரின் பின்னர் வடக்கில் பல மக்கள் வறுமையில் உள்ளனர். வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்புவதற்குப் பணமின்மை மற்றும் நடந்து அல்லது பஸ் மூலம் செல்வதற்கு இயலாமையில் உள்ள நோயர்ளர்கள் அவர்களது இல்லத்துக்கு இந்த அம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்படுவர்.

இந்தச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் சிவில்



தர்மவர்த்தன பவுண்டேசன் நிறுவனத்தின் செயலாளர் லெஸ்லி தர்மவர்த்தன, தலைவர் பேர்சி தர்மவர்த்தன, பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன், வைத்தியர்கள், வைத்தியசாலையின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ - 100)

# கன்னியாகுமரி வந்தார் மோடி!

## கறுப்புக் கொடி காண்பித்த வைகோ உள்ளிட்டோர் கைது

சென்னை, மார்ச் 02

பிரதமர் நரேந்திர மோயின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்ட ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உட்பட அவரது கட்சியினரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அரசு சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காகவும், மக்களவை தேர்தலை ஒட்டி நடைபெறும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காகவும் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கன்னியாகுமரி வந்தடைந்தார்.



இந்நிலையில், நேற்றுக்காலை முதலே பிரதமரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ம.தி.மு.கவின் பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் அக்கட்சியினர் கண்டன முழக்கங்களை எழுப்பியதுடன், கறுப்புக்கொடி காண்பித்தும், கறுப்பு பலூன்களைப் பறக்கவிட்டும் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

அப்போது பேசிய வைகோ, பிரதமர் மோடி காவிரிப் பிரச்சினையில் தமிழகத்துக்கு துரோகம் செய்து விட்டார். கர்நாடக அரசு மேகேதாட்டுவில் அணை கட்ட அனுமதி அளித்து தமிழகத்தை வஞ்சித்து விட்டார். காவிரி மண்டலத்தை ஹைட்ரோகார்பன் திட்டத்தின் மூலம் அழிக்க முயற்சிக்கிறார். முல்லைப் பெரியாறு அணையை கேரள அரசு இடிக்க முயற்சிப்பதற்கு துணை போகிறார் என்று அவர் பேசினார்.

அதுமட்டுமின்றி, தலைவர்கள் போராடி பெற்றுத் தந்த சமூகநீதியை ஒழித்துக் கட்டும் செயலிலும் ஈடுபடும் மோடி, அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையாக வாழும் நாட்டில் இந்துத்துவாவை திணித்து சீர்குலைக்க முயற்சிக்கிறார் என்றும், கஜா' புயலால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்ட போது அனுதாபம் கூட தெரிவிக்காமல், தமிழகத்தை தொடர்ந்து வஞ்சிக்கும் மோடி தமிழகத்துக்கு வர எந்த அருகதையும் இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

பிறகு, ம.தி.மு.கவினர் போராட்டம் நடத்திய இடத்துக்கு பா.ஜ.க.வினர் வரவே, இருதரப்பினருக்கும் இடையே ஆரம்பித்த வார்த்தை மோதல் ஒருகட்டத்தில் கல்வீச்சாக – தாக்குதலாக – உருமாறியது. இதனையடுத்து களத்தில் இறங்கிய காவல்துறை அதிகாரிகள் தடியடியை நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதைத்தொடர்ந்து, வைகோ உள்ளிட்ட நூற்றுக்கணக்கான ம.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டு காவல்துறையின் வான்களில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

---

*மக்களவைத் தேர்தல் 2019:*

# இன்னும் இறுதியாகாத தி.மு.கவின் கூட்டணி



சென்னை, மார்ச் 02

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியை இறுதி செய்துவிட்ட தி.மு.க. பிற கட்சிகளுடன் கூட்டணியை இன்னும் முடிவுசெய்யவில்லை. தே.மு.தி.கவுடனான கூட்டணிப் பேச்சுக்கள் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன எனவும் சொல்லப்படுகிறது.

2019ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கிவரும் நிலையில், தமிழக அரசியல் கட்சிகள் தங்கள் கூட்டணிகளை இறுதிசெய்து வருகின்றன. ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சியுடனும் பாரதீய ஜனதா கட்சியுடனும் கூட்டணி அமைத்துள்ளது. பா.ம.கவுக்கு ஏழு மக்களவை இடங்களும் ஒரு மாநிலங்களவை இடமும் பா.ஜ.கவுக்கு ஐந்து மக்களவை இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிட கழகத்துடனும் அ.தி.மு.க. கூட்டணி பேச்சு நடத்தி வந்தது. ஆனால், அ.தி.மு.க. கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு வழங்கப்பட்டதைப் போல ஏழு இடங்களைத் தங்களுக்குத் தர வேண்டுமென தே.மு.தி.க. கோரியதால், அந்தப் பேச்சுகளில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை.

தி.மு.க. கூட்டணியைப் பொறுத்தவரை, காங்கிரஸ் கட்சிக்கு தமிழகத்தில் ஒன்பது இடங்களும் புதுச்சேரியில் ஓரிடமுமாக பத்து இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ஓர் இடமும் கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியைச் சேர்ந்த ஈஸ்வரனுக்கு தி.மு.க. சின்னத்தில் போட்டியிடும் வகையில் ஓர் இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், தி.மு.கவுடன் நீண்ட காலமாகவே இணைந்து செயல்பட்டுவரும் ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றுடன் இதுவரை உடன்பாடு எட்டப்படவில்லை. இரு கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை மட்டுமே நடந்து முடிந்துள்ளது. மேலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவையும் தி.மு.க. கூட்டணியில் இணைவதற்காக காத்திருக்கின்றன.

இதற்கிடையில், உடல் நலமின்றி இருந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் சென்று சந்தித்தார். ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளுடன் தி.மு.க. குழுவினர் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்த அதே நேரத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. விஜயகாந்தை நலம் விசாரிக்கவே தான் சென்றார் என மு.க.ஸ்டாலின் அப்போது தெரிவித்தாலும் அதற்குப் பிறகு, தி.மு.க.– தே.மு.தி.க. இடையே கூட்டணி தொடர்பான பேச்சுகள் நடைபெறுவது உறுதியானது.

தி.மு.க. கூட்டணியில் ஏற்கனவே காங்கிரஸ் கட்சிக்கு பத்து, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு ஒன்று, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சிக்கு ஒன்று மொத்தமாக 12 இடங்களைப் பகிர்ந்தளித்து விட்ட நிலையில், மீதமுள்ள 28 இடங்களில் ம.தி.மு.க., வி.சி.க., சி.பி.எம். ஆகியவை குறைந்தது இரண்டு இடங்களையாவது எதிர்பார்க்கின்றன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஓர் இடத்தையாவது எதிர்பார்க்கிறது. ஆனால், தி.மு.கவைப் பொறுத்தவரை இந்தக் கட்சிகள் அனைத்திற்குமே தலா ஓர் இடத்தை மட்டுமே தர விரும்புகிறது.

தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. குறைந்தது நான்கு மக்களவை இடங்களையும் ஒரு மாநிலங்களவை இடத்தையும் எதிர்பார்த்ததாகவும் இதனால், தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு அளிப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்ட பத்து இடங்களில் இரண்டு இடங்களை திருப்பியளிக்கும்படி கேட்டதாகவும் சொல்லப்பட்டது.

ஆனால், தற்போது வெளியாகியுள்ள தகவல்களின்படி தி.மு.க. – தே.மு.தி.க. கூட்டணிப் பேச்சுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தே.மு.தி.க. அ.தி.மு.கவுடனேயே கூட்டணி வைத்துக்கொள்ளும் வாய்ப்புகள் இதனால் அதிகரித்துள்ளன. ஆகவே, தி.மு.கவைப் பொறுத்தவரை ம.தி.மு.க., வி.சி.க., சி.பி.எம்., சி.பி.ஐ. ஆகிய கட்சிகளுட்ன் விரைவில் கூட்டணியை உறுதிப்படுத்த இருப்பதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

---

# அபிநந்தனுக்கு விமானம்; நிராகரித்தது பாகிஸ்தான்

புதுடில்லி, மார்ச் 02

இந்தியாவிற்குதிருப்பி அனுப்பப்படும் இந்தியா விமானப்படை விமானி அபிநந்தனை விமானத்தில் அனுப்பும்படி இந்தியா கேட்டதாகவும், அந்த கோரிக்கையை ஏற்க பாகிஸ்தான் மறுத்து விட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

அபிநந்தனை விடுவிக்க பாகிஸ்தான் ஒப்புக் கொண்ட உடன், அவரை சிறப்பு விமானத்தில் அனுப்பி வைக்கும்படி இந்தியா, பாகிஸ்தானிடம் கேட்டுள்ளது.

ஆனால் இதனை மறுத்து விட்ட பாக்., வாகா எல்லை வழியாக மட்டுமே அவரை திருப்பி அனுப்புவோம் என கூறி உள்ளது. அபிநந்தனை திருப்பி அனுப்பப்படுகின்றமையால் பதற்றம் காரணமாக நேற்று வாகா எல்லையில் கொடிஇறக்கும்நிகழ்வுரத்துசெய்யப்பட்டது.

பிடிஐ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில், வாகா எல்லை வழியாக அபிநந்தனை திருப்பி அனுப்ப உள்ளதாக இந்தியாவை தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளது. சாலை மார்க்கமாக வாகா எல்லை வழியாக அமிர்தசரசிற்கு அனுப்புவது அல்லது இஸ்லாமாபாத்தில் இருந்து விமானம் மூலம் அனுப்புவர் என்ற 2 வாய்ப்புகளே இருந்தன.

இதில் வாகா எல்லை யில் ஊட்கங்களும், பொதுமக்களும் அதிக அளவில் குவிய வாய்ப்புள்ளதால் விமானம் மூலம் அபிநந்தனை அனுப்பி வைக்கவே இந்தியா விரும்பி உள்ளது. அபிநந்தன் விடுதலை குறித்து பாக்., பிரதமர் இம்ரான் கான் அறிவித்ததுமே ,அவர் விமானி என்பதால் தனி விமானம் மூலம் அனுப்பி வைக்க இந்தியா கேட்டுள்ளது.

அத்துடன் அபிநந்தனை விமானம் மூலம் நேரடியாக டில்லி வரவைத்து, அங்கு அவருக்கு விரிவான மருத்துவச் சோதனை நடத்த இந்தியா விரும்பியது.

ஆனால் அதனை பாக்.,நிராகரித்து விட்டது. இந்த தகவல் பரவியதும் அதிகாலை முதலே வாகா எல்லையில், அபிநந்தனை வரவேற்க பொது மக்கள் அதிக அளவில் திரண்டுள்ளனர்.

வாகா சாலை வழியாக அபிநந்தன் நடந்து வருகையில் மேளதாளங்கள் வாசித்து, பாரத் மாதா கி ஜே என முழக்கமிட மக்கள் திரண்டுள்ளனர்.

மாலைகள், தேசப்பற்று பாடலுடன் அபிநந்தனை வரவேற்க 2 விமானப் படை அதிகாரிகள் குழுவும் வாகா எல்லையில் காத்திருந்தது.

---

# எழுவரின் விடுதலை கோரி மனித சங்கிலிப் போராட்டம்

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரின் விடுதலையை வலியுறுத்தி மனித சங்கிலி போராட்டத்தை நடத்துவதற்கு நாம் தமிழர் கட்சி, மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த மனித சங்கிலி போராட்டத்தை எதிர்வரும் 9ஆம் திகதி நடத்தவுள்ளதாக அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது–

ராஜீவ்காந்தி கொலை வழக்கில், 28 வருடங்களாக சிறைவாசகம் அனுபவித்துவரும் பேரறிவாளன், சாந்தன், முருகன், றொபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் மற்றும் நளினி ஆகியோரை விடுதலை செய்யக்கோரி தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றி 6 மாதங்கள் கடந்துள்ளன.

இந்நிலையில் அந்தத் தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்காமல் காலதாமதம் செய்யும் தமிழக ஆளுநரின் செயல் கண்டிக்கத்தக்கதோர் விடயமாகும்.

மேலும் ஆளுநரின் செயற்பாடு, ஜனநாயக நெறிமுறைகளைப் பின் தள்ளி அதிகாரத்தைத் தவறுதலாக பயன்படுத்தும் அத்துமீறலாகும்.

இதேவேளை எழுவரின் விடுதலை குறித்து அழுத்தம் கொடுக்க, தமிழக அரசு தற்போது தவறியுள்ளது.

இதனால் எழுவரின் விடுதலைக்குத் தமிழக ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும் மற்றும் தமிழக அரசு இவ்விடயத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் 9 ஆம் திகதி மாபெரும் மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், புதுச்சேரி ஆகிய பகுதிகளில் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இப்போராட்டத்தை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்– என்றார். (ஐ)

# பின்லேடனின் மகனையும் குறிவைக்கிறது அமெரிக்கா



ஒசாமா பின்லேடனின் மகன்களில் ஒருவரான ஹம்சா பின்லேடன் குறித்து தகவல்களைத்தருபவர்களுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் சன்மானம்வழங்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத் துறை அறிவித்துள்ளது.

அல் – கொய்தா அமைப்பின் முக்கியத் தலைவராக ஹம்சா உருவாகி வருகிறார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. தனது தந்தை கொல்லப்பட்டமைக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளைப் பழி வாங்க வேண்டுமென, சமீப ஆண்டுகளில் ஹம்சா காணொலி மற்றும் ஒலி வடிவச் செய்திகளை வெளியிட்டு வருகிறார்.

சுமார் 30 வயதாகும் ஹம்சா பின் லேடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவால் சர்வதேசத் தீவிரவாதி என அறிவிக்கப்பட்டார்.

அவர் ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் இருக்கிறார் எனக் கருதுகிறோம். அவர் இரானுக்குள் செல்லலாம். தெற்கு மத்திய ஆசியாவில் எங்கு வேண்டுமானாலும் அவர் இருக்கலாம், என ஹம்ஸாவின் இருப்பிடம் குறித்து அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஐ)

# என்னதான் பேசினாலும் எம் நிலைப்பாடு மாறாது

## வடகொரியா திட்டவட்டம்

ஹனோய், மார்ச் 02

அமெரிக்கா மேலும் பேச்சுக்களை எதிர்பார்த்தாலும், தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என வடகொரியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

வியட்நாம் உச்சிமாநாட்டைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் றி யொங் ஹோ விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அந்தச் சந்திப் பின்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான உச்சிமாநாட்டில் வடகொரியா சார்பில் யதார்த்தமான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

அதன்படி, புளூரோனியம் மற்றும் யுரேனியம் உள்ளிட்ட அனைத்து அணுசக்தி உற்பத்தித் தளங்களையும் நிரந்தரமாக அழிப்பதற்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்னர் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பொருளாதாரத் தடைகளை முழுமையாக நீக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், எமது கோரிக்கையை ஏற்பதற்கு அமெரிக்கா தயாராக இல்லை – என்றார்.

அனைத்துத் தடைகளையும் நீக்கவேண்டும் என்ற வடகொரியாவின் கோரிக்கையை அமெரிக்கா மறுத்துவிட்டதாக நேற்று முன்தினம் ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.



அதன்படி வடகொரியாவுடனான அணுசக்தி உடன்பாட்டிலிருந்து விலகுவதாகவும் உச்சிமாநாட்டின் நிறைவில் ட்ரம்ப் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிரிய இஸ்லாமிய தேசத்தை முழுமையாக மீட்டுள்ளோம்!

## அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் பெருமிதம்

ஐ.எஸ்தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சிரியாவின் பகுதிகளை அமெரிக்க– சிரியபடைகள் முழுமையாக மீட்டுள்ளன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதற்கு மாறாக தீவிரவாதிகளின் வசமிருக்கும் பகுதிகளை முழுமையாக மீட்க மேலும் ஒரு வாரம் ஆகுமென சிரியப் படைகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

சிரியாவில் உள்ள சில இடங்களில் 90 ,92 வீதமான பகுதிகள் தீவிரவாதிகளிடம் இருந்து முன்பதாக மீட்கப்பட்டிருந்தன. தற்போது 100 வீதமான பகுதிகளும் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

இதேவேளை, சிரியாவின் வெற்றி இன்னும் ஒரு வாரத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனச் சிரியப் படைகளின் தளபதி மஸ்லோம் கபனி கடந்த செவ்வாய்க்கிழமை காணொலி ஒன்றின் மூலம் தெரிவித்திருந்தார்.

சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றியிருந்த பகுதிகளை, சிரிய இராணுவப் படைகளுடன் இணைந்த அமெரிக்கப் படைகள் மீட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இடிந்து வீழ்ந்த கட்டடத்தில் இருந்து இரு நாள்களுக்குப் பின் சிறுமி மீட்பு!



சிரியாவில் விமானப்படைத் தாக்குதலில் இடிந்து வீழ்ந்த கட்டடத்தில் இருந்து இரண்டு நாள்களுக்குப் பின் சிறுமி ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.


வடமேற்குப் பகுதியில் உள்ள போராளிகளைக் குறிவைத்து அரசுத் தரப்பினர் கடந்த செவ்வாய்க்கிழமை விமானத் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதில் ஏற்கனவே சேதமடைந்த கட்டடங்கள் இடிந்து விழுந்ததுடன் இந்தத் தாக்குதலில் 3 சிறுமிகள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், 5 வயதுச் சிறுமி ஒருவர் படுகாயங்களுடன் இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பது இரண்டு நாள்களுக்கு பின்னர் தெரியவந்தது.

இதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் பல மணி நேரப் போராட்டத்திற்குப் பின் சிறுமியைப் பாதுகாப்பாக மீட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதித்தனர். (ஐ)

# இறந்தவருக்கு உயிர் கொடுத்து சிக்கலில் மாட்டிய மத போதகர்



ஜொகன்னர்ஸ்பேர்க், மார்ச் 02

சவப்பெட்டியில் இருக்கும் இறந்தவரின் உடலை பார்த்து எழுந்திரு, எழுந்திரு! என்று மத போதகர் ஒருவர் கத்துவது போன்ற காணொலி ஒன்று தென்னாபிரிக்காவில் வைரலாக பகிரப்பட்டுள்ளது.

இறந்தவர் மெதுவாக எழுந்து நேராக உட்காருகிறார். அங்கு கூடியிருப்போர் ஆச்சரியமடைகின்றனர். ஆரவாரம் செய்கின்றனர்.

ஆனால், நவீன கால அற்புதச் செயலாக கூறப்படும் இதனை எல்லோரும் நம்பத் தயாராக இல்லை.

தன்னைத்தானே மத போதகர் என்று அறிவித்துக் கொண்டுள்ள இந்த நிகழ்வில் பங்கெடுத்ததன் மூலம், மத போதகர் ஆல்ப் லுகா இவர்களை அவரது ஆதாயத்திற்காக பயன்படுத்திக் கொண்டார் எனக் கூறி, இறுதிச் சடங்கு நடத்துகின்ற தலைவர் குழுவால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

ஜோகனஸ்பேர்க்கில் இந்தப் போதகரின் தேவாலயத்திற்கு அருகிலுள்ள வெளிப்புற இடம் ஒன்றில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் இறந்தவரை உயிர்ப்பித்தல் நிகழ்வு, இணையதளத்தில் கேலி செய்யப்படுவதோடு, கண்டனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

இவ்வாறான அற்புதங்கள் என்று ஒன்றும் இல்லை, என்று தென்னாபிரிக்க கலாசார, மத மற்றும் மொழி உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

நம்பிக்கை இழந்துள்ள நமது மக்களிடம் இருந்து பணம் பறிக்க புனையப்பட்டு நிறைவேற்றப்படும் முயற்சிகள் இவை, என்று அது தெரிவித்துள்ளது.

இதில் கலந்து கொள்வோரும் தாங்கள் ஏமாற்றப்படுகிறோம் எனக் கூறி அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்த திட்டத்தால் தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கும் மூன்று நிறுவனங்கள், தங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக தெரிவித்துள்ளன.

இந்த தேவாலய உறுப்பினர்கள் வித்தியாசமான வழிகளில் தங்களை ஏமாற்றிவிட்டன என கிங்டம் புளூ, கிங்ஸ் அண்ட் குயின்ஸ் இறுதிச்சடங்கு சேவை மற்றும் பிளாக் போனிக்ஸ் நிறுவனங்கள் உள்ளூர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளன.

சவத்தை கொண்டு செல்லும் வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுக்க சென்றபோது, கிங்ஸ் அண்ட் குயின்ஸ் இறுதிச் சடங்கு சேவை நிறுவனத்திற்கு நம்பகரமாக தோன்றுவதற்காக பிளாக் போனிக்ஸ் நிறுவனத்தின் ஸ்டிக்கர்கள் தனியார் காரில் அவர்கள் ஒட்டி வைத்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.

கிங்டம் புளூ நிறுவனத்திடம் இருந்து சவப்பெட்டி வாங்கப்பட்டிருந்ததாக இறுதிச்சடங்குகளை ஏற்பாடு செய்யும் குழுவின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

போதகர் லுகாவின் தேவாலயமான அல்லேலூயா மினிஸ்டிரி இன்டர்நேசனல் இது பற்றி கருத்து தெரிவிக்க கேட்டுக் கொண்ட பிபிஸிக்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லை.

ஆனால், த சோவிடான் செய்தி இணையதளமானது இந்த தேவாலயம் இறந்தவர்களை உயிர்ப்பித்தல் பற்றிய அற்புதத்தில் இருந்து பின்வாங்கியுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது.

கராமெர்வில்லி வளாகத்திற்கு கொண்டு வரப்பட்டபோது, இறந்தவராக கருதப்பட்டவர் உண்மையிலே, ஏற்கெனவே உயிரோடு இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடவுள் ஏற்கெனவே தொடங்கியிருந்த அற்புதத்தை போதகர் லுகாவ் நிறைவு பெற மட்டுமே செய்துள்ளார் என்று அல்லேலூயா மினிஸ்டிரி இன்டர்நேசனலை மேற்கோள்காட்டி த சோவிடான் வெளியிட்டுள்ளது.

இறந்தவராக இருந்து உயிர்ந்தெழுத்தவரை, சவப்பெட்டியில் தானே அவ்வாறு இறந்த நிலையில் இருக்க வைத்ததாக உள்ளூர் வானொலியில் ஒருவர் ஒப்புக் கொண்டமையால் இந்த நிகழ்வில் மேலதிக சந்தேகங்கள் எழுந்தன என்று பிபிஸியின் மில்டன் நகோசி தெரிவிக்கிறார்.

இந்த உயிர்ப்பு நிகழ்வு நடத்தப்பட்ட நாளில், உயிர்த்தெழச் செய்யப்பட்டார் எனக் கூறப்படும் மனிதர், இறுதிச்சடங்கு ஒன் றில் பங்கேற்பதற்காக பணியிலிருந்து விடுப்பு எடுத்திருந்தார். ஆனால், அவருடைய இறுதிச்சடங்கில்தான் பங்கேற்கிறார் என்ற உண்மையை அவர் கூறவில்லை.

(ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# செயற்கரிய செயல்கள் பல புரிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகன்

# கோடீஸ்வரன்!

தமிழ் மொழியுரிமைப் போராட்ட வரலாற்றில் தடம் பதித்த வரலாற்று நாயகன் மூத்த சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாண மேல் நீதிமன்றின் சிறப்பு அமர்வு யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தலைமையில் கூடிய இந்த சிறப்பு மேல் நீதிமன்ற அமர்வில் மறைந்த மூத்த சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரனுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அமர்வில் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத் லெப்பை அப்துல் மனாப், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமகமலன், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், தொழில் நியாய சபையின் தலைவர் வெள்ளத்தம்பி முகம்மட் சியான் மற்றும் சட்டத்தரணிகள், சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரனின் இளைய புதல்வர் மருத்துவர் கே.சிவகுமார் உள்ளிட்ட உறவினர்கள் பற்கேற்றனர்.

அமர்வின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சுப்ரமணியம் பரமராசா இரங்கல் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் இரங்கல் உரையாற்றினார்.

ஒரு நீதிமன்றத்தில் பணியாற்றிய எம்மை விட்டகலும் சட்டத்தரணி ஒருவரை நினைத்து அவரது ஆன்ம ஈடேற்றத்தினை வேண்டி நீதிமன்ற சிறப்பு அமர்வு இடம்பெறுவது மரபு வழியான ஒன்று.

அந்த வகையிலே மரியாதைக்குரிய, மாண்புமிக்க, மனிதத்துவமுடைய, மூத்த சட்டத்தரணி, செல்லையா கோடீஸ



வரன் பெப்ரவரி 15ஆம் திகதி அன்று எம்மைவிட்டுமீளாத்துயில்கொண்டுள்ளார்.

அமரர் செல்லையா கோடீஸ்வரன் இறுதி நிகழ்வுகளில் கலந்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை நாம் எல்லோரும் தெரிவித்திருந்தோம்.

உத்தியோகபூர்வமாக இன்றைய தினம் நீதிபதிகளாகிய நாம் எல்லோரும்

## வடக்கு மாகாண மேல் நீதிமன்றின் நேற்றைய சிறப்பு அமர்வில் இரங்கல்

சட்டத்தரணிகளாகிய எல்லோரும் நீதிமன்ற உத்தியோகத்தர்களாகிய எல்லோரும் சட்டத்தரணி அமரர் செல்லையா கோடீஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கூடியிருக்கிறோம். நாம் எல்லோரும் எழுந்து நின்று அமரர் கோடீஸ்வரனை நினைத்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோமாக!

செயற்கரிய செயல்கள் பல புரிந்து வையத்துள் வாழ்வாங்கு எமது காலத்தில் வாழ்ந்து அமரத்துவமடைந்த செல்லையா கோடீஸ்வரனின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை எழுதும்போது அவரின் பழைய நினைவுகள், அவர் செய்த மகத்தான சேவைகள் வந்து எனதுள்ளத்தை பதறவைக்கின்றது. வாழ்வது ஒரு முறை வாழ்த்தவேண்டும் தலைமுறை என்ற ரீதியில் நல் வாழ்வு வாழ்ந்தவர்.

ஆம், செல்லையா கோடீஸ்வரன் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். கடந்த பத்து வருடங்களாக ஓரிடத்திலேயே குலுங்காமல் சலிக்காமல் உழைத்து உயிர்விட்டுவிட்டார். அன்னாரின் மறைவு அவருக்கு கிடைத்த முத்திப்பேறு. அவரை இழந்து நிற்கும் அன்புத் துணைவி கோணேசரஞ்சிதம் மற்றும் பிள்ளைகளான மருத்துவர் பரமேஸ்வரன், மருத்துவர் சிவகுமாரன், கோணேஸ்வரி, சித்திரா மேலும் உற்றார் உறவினர் நண்பர்களுக்கு பெரிய இழப்பாகும்.

செல்லையா கோடீஸ்வரனை நான் நீதித்துறையில் இணைந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் சேவையாற்ற வந்த 1999களில் அறிந்து கொண்டேன். அப்போதைய காலச் சூழ்நிலைகளில் மனிதத்துவமுடைய ஆச்சாரசீலமுடைய சட்டத்தரணியாக கோடீஸ்வரனை நான் கண்டேன்.

ஏழைகளுக்காக நீதிவேண்டி ஊதியம் பாராது, தன்நலம் கருதாது அவர் ஆற்றிய சேவை, வெளிப்படுத்திய உணர்வுகள், அவர் எடுத்த தற்துணிவான முடிவுகள், அன்னாரை தனித்துவம் மிக்கவராக இனங்காட்டியதுடன் மெய்யியலாளர் பிளேட்டோவின் சிந்தனைக் கோட்பாடான நிதானம், நீதி, வீரம், பெருந்தன்மை, உண்மை இவைதான் ஆத்மாவின் அணிகலன்கள் என்ற கோட்பாட்டிற்கு ஏற்றவாறு வாழ்ந்த ஒரு கர்மவீரன் என்றால் அது மிகையாகாது.

இவர் மக்களுக்கு ஆற்றிய சேவை குறிப்பாக, வடமராட்சி மக்களுக்கு ஆற்றிய சேவை வெகுவாக சிலாகிக்கப்படுகின்றது. பருத்தித்துறை நீதிமன்றத்தில் அந்நேர கால சூழ்நிலைகளில் அவர் கர்ச்சிப்பது என் கண் முன்னே நிழல் ஆடுகின்றது. சட்ட வல்லுநர் என்ற வகையில் தனது நிலைப்பாட்டை சுட்ட பழத்தில் ஊசி ஏற்றுவது போல் நுணுக்கமாகவும் தெளிவாகவும் முன்வைப்பது சட்டத்தரணி கோடீஸ்வரனுக்குரிய தனித்துவம் என நான் காண்கின்றேன்.

தனதுநான்காவதுவயதில்தந்தையை இழந்து தலைகுனிந்து கற்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே என்ற கூற்றுக்கமைய கல்வி கற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எழுதுவினைஞராக தன்னை இணைத்துக் கொண்டு சிறந்த நற்சேவையை ஆற்றும்போது 1956ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட உத்தியோகபூர்வ மொழிச் சட்டமும், அதன்கீழ் 1961ஆம் ஆண்டு வெளிவந்த திறைசேரி சுற்றுநிருபமும் சோல்பரி அரசியல் யாப்பின் 29(2)ஆம் பிரிவிற்கு முரணானது என்று லண்டன் கோமறைக் கழகம் வரை சென்று வழக்கு நடத்தி வெற்றி கண்டவர்.

இவ்வழக்கானது இலங்கையில் மட்டுமன்றி உலக அரங்கிலும் பிரசித்தி பெற்றதாக விளங்குவதைக் காணலாம். தமிழ் அரச ஊழியர்களை உள்ளடக்கி அரச எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கி அதன் செயற்திட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அரும் பணியாற்றியவர். பின்னர் அப்பதவியிலிருந்து விலகி இலங்கை சட்டக்கல்லூரியில் இணைந்து 1969இல் தன்னை ஒரு சட்டத்தரணியாக நிலை நிறுத்திக் கொண்டதுடன் தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயலாளராக இருந்து அரும்பணியாற்றினார்.

இவ்வேளையில் அமரர் செ.கோடீஸ்வரனுக்கு எமது கவிதாஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.



**வடக்கு கிழக்கு கலந்து பெற்ற தலைமகனே கோடீஸ்வரா!**
**குழந்தை மனமும் உயர்ந்த மெல்லிய தோற்றமும்**
**தெய்வ சிந்தையில் நெற்றியில் திலகமும்**
**கண்டவர் மகிழ புன்னகை உதடும்**
**காரணத்தேடலும் காரியச் செயலும்**
**திறம்படப் பெற்றே எளிமையாய் இருந்தீர் - இன்று**
**உங்கள் இருவிழி மூடியதால்**
**பல விழிகள் ஈரத்தால் நனைந்தனவோ!**

**எழுதுநராக தான் அமர்ந்து அதில் தடைகளும் எழுந்திட**
**தழிழரின் அவலம் திசைகளும் அறிந்திட**
**தடைகளை எழுதிடும் உலகமும் குனிந்திட**
**தரப்பினராகி வழக்கொன்று அமைத்தீர்**
**அகிலமே அதிர்ந்திட வெற்றியும் கண்டீர் - பின்**
**சட்டத்துறை புகுந்து சட்டத்தரணியாய் மிளிர்ந்து**
**ஏழைகள் வாழ்வோங்க வழக்குரைத்தீர் - இன்று**
**எமையெல்லாம் கண்ணீரில் மூழ்க விட்டீர்கள் ஐயா!**

**பிறதேசம் பிள்ளைகளை அனுப்பிவிட்டு நம்தேசம் உய்யும்வரை**
**அத்தேசம் வரமாட்டேன் என்று வீராப்பாய் நின்றவரே - உங்கள்**
**இனப்பற்றும் மொழிப்பற்றும் கண்டு வியக்கிறது உள்ளமெல்லாம்**
**உன்னவளும் பிள்ளைகளும் கதிகலங்கி வாடி நிற்க**
**உறவுகளும் சட்டத்தரணிகளும் உங்கள் பிரிவு கேட்டு ஏங்கி நிற்க**
**சொல்லாமல் கொள்ளாமல் விண்ணுலகம் சென்றதேனோ?**
**உயிரில் கலந்திருந்த உங்கள் உறவுகளின் துயரில்**
**பங்கெடுத்து கண்ணீர் ததும்ப அஞ்சலித்து நிற்கின்றோம்.**

இன்றைய நிகழ்வுகள் தொடர்பான பதிவுகளை முறையாக தயாரித்து அமரர் செல்லையா கோடீஸ்வரனின் அருமைத் துணைவியார் கோணேசரஞ்சிதம் கோடீஸ்வரன் அம்மையாரிடம் சேர்ப்பிக்க மேல் நீதிமன்ற பதிவாளர் பணிக்கப்படுகின்றார்.

* * *

'கோடீஸ்வரன் மொழி வழக்கு' என்று புகழ்பெற்ற இவ்விழக்கு தனியொருவரான கோடீஸ்வரனால் கொண்டு நடத்தப்பட்ட போதும், அனைத்து தமிழ் மக்களதும் உள்ளக்கிடக்கையையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாயமைந்ததால் இலங்கைத் தமிழரின் மொழியுரிமைப் போராட்டத்தில் அழிக்க முடியாத வரலாறாகவும், பெறுமதிக்க செயற்பாடாகவும் அமைந்தது.

பின்னாளில் அரச எழுதுவினைஞர் சங்கத்தின் தலைவராகவிருந்து செயற்பட்ட கோடீஸ்வரன், தன்னைத் தேடிவந்த பல அரசியல் பதவிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. திருகோணமலையில் புகழ்பெற்ற மருத்துவர் சித்திரவேலுவின் மகளை மனைவியாக வரிந்துகொண்ட இவர், திருகோணமலைத் தமிழ் மக்களின் பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரியவராக விளங்கினார்.

திருகோணமலைத் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்காத இவர், அரசியலில் ஈடுபட்டிருந்தால் தமிழர்களின் தன்னிகரற்ற நேர்மையான அரசியல் தலைவராகியிருப்பார் என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்கள் வடக்கென்றும், கிழக்கென்றும், மலையகம் என்று பிரிந்து நிற்கக் கூடாதென்பதில் தீவிரம் கொண்ட கோடீஸ்வரன் மலையகத் தமிழர்களது உரிமைக்கும், நன்மைக்கும் குரல் கொடுக்கத்தயங்கியதில்லை.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் நாடு கடத்தும் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, அதைஎதிர்த்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைப் நாடாளுமன்ற உறுப்பினராக விருந்த வ. நவரத்தினத்தின் கரங்களைப் பலப்படுத்து முகமாக அவருடன் இணைந்து தமிழர் சுயாட்சிக்கழகத்தின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டார். பிரபல குடியியல் சட்டத்தரணியான கோடீஸ்வரன் என்றுமே சாதாரண மக்களில் ஒருவனாக அனைவரதும் அன்பைப்பெற்றவராகத்திகழ்ந்தார்.



# 2000 புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் திட்டம் வன்னியில்



வவுனியாவில் நேற்று ஆரம்ப நிகழ்வு

வவுனியா, மார்ச் 02

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பகுதியில் 2020 ஆம் ஆண்டளவில் 2000 புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியூதீன், அபிவிருத்தி மூலோபாய பிரதி அமைச்சர் நளின் பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் 2020ஆம் ஆண்டளவில் இலங்கையின் ஏற்றுமதி வருவாயை 28 பில்லியன் டொலர்களாக அதிகரித்தல், புதிய ஏற்றுமதியாளர்கள் இரண்டாயிரம் பேரை உருவாக்குதல் என்பனவற்றை நோக்கமாக கொண்டு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'ஏற்றுமதியில் முதலிடத்தை பெறுங்கள்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு கருத்தரங்கும், தொழில்நுட்பக் கண்காட்சியும் இதன்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றன.

முன்னதாக மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சிக் கூடத்தை நாடா வெட்டி திறந்து வைத்த அதிதிகள் அதனைப் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து கருத்தரங்கு நிகழ்வு மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு வழங்கல், ஏற்றுமதித்துறையின் தொழில் நுட்பத்தைக் காட்சிப்படுத்தல், பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றுமதித்துறை தொடர்பான அறிவை வழங்கல், முன்னிலை வகிக்கும் வர்த்தகர்களை ஏற்றுமதித் துறைக்குள் உள்வாங்குதல் போன்றவற்றுக்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

நிகழ்வில் மன்னார் அரச அதிபர் மோகன்ராஸ், திணைக்கள தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள், அரச அதிகாரிகள், வர்த்தகதுறையினர், வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(ஐ - 100)

## மாணவனுக்கு சைக்கிள்

தெல்லிப்பழை, மார்ச் 02

கருகம்னை இந்து இளைஞர் கழகத்தின் கல்விக் கரம் செயற்திட்டம் ஊடாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் வறிய நிலையில் உள்ள மாணவன் ஒருவருக்கு சைக்கிள் வழங்கப்பட்டது.

பாடசாலை ஆசிரியர் சுபாஸ்கரனால் கழகத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய புலம்பெயர்ந்து டென்மார்க் நாட்டில் வசித்துவரும் எமது கழக நலன் விரும்பி தனது பிறந்த தினத்தை முன்னிட்டு இதற்கான நிதியை வழங்கினார். (ஐ)



பிரபல பாதாளக்குழு உறுப்பினரான

## 'தெமட்டகொட ருவன்' உள்ளிட்ட 8 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 02

திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த பிரபல பாதாளக்குழு உறுப்பினரான தெமட்டகொட ருவன் உள்ளிட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்த 8 பேரில் பாகிஸ்தான் தம்பதியினரும் அடங்குகின்றனர்.

சந்தேகநபர்களிடமிருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள், பணம் எண்ணுவதற்குப் பயன்படுத்தப்படும் 2 கருவிகள், 4 கிராம் ஹெரோயின் மற்றும் 3 சொகுசு வாகனங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. தெமட்டகொட பகுதியிலுள்ள வீடு சுற்றிவளைக்கப்பட்டபோதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட தெமட்டகொட ருவன் என்பவர் பிரபல பாதாளக் குழுத் தலைவரான தெமட்டகொட சமிந்தவின் சகோதரர் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. (ஐ)

## 151 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணம்



யாழ்ப்பாணம், மார்ச் 02

அனைத்து வளங்களும் நிறைந்த வடக்கு மாகாணம் இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கும் மானியம் கொடுக்கக்கூடிய மாகாணமாக ஒரு நாள் மாறவேண்டும் என்பதே என் கனவு. அந்த கனவையே நான் இங்கு விதையாக விட்டுச்செல்ல விரும்புகின்றேன் என்று ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஆளுநர் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமாகாணத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 151 பாடசாலைகளுக்கு யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் சிட்னி கிளையுடன் ஏனைய கிளைகளும் இணைந்து 2 கோடி ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வில் ஆளுநர் அவர்கள் சம்பிருதாய பூர்வமாக ஐந்து பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். (ஐ)

# கல்விக்கே முதலிடம்!



வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

கல்விக்கு முதலிடம் கொடுத்த ஒரு கலாசாரம் வடமாகாண கலாசாரம். இன்று நாம் விழுந்திருக்கின்றோம் . மாவட்ட ரீதியாக 22 ஆவது இடத்திலும், மாகாண ரீதியாக 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ள வடக்கு மாகாணத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்காக நாம் பணிபுரியவேண்டும். நான் ஆளுநராக இருக்கும் கடைசி நிமிடம்வரை கல்விக்கு முதலிடம் கொடுப்பேன் என்று ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடமாகாண இளைஞர் , யுவதிகளின் தொழிற்கல்வியினை மேட்படுத்தும் நோக்கில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட மாணவர் மற்றும் இளைஞர் யுவதிகளின் உயர்கல்வி , தொழிற்கல்வி தொடர்பிலான தகவல்கள் அடங்கிய கையேட்டை வெளியிடும் நிகழ்வு ஆளுநர் தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆளுநர் உரையாற்றுகையில் –

கல்வி என்பது சமூக செயல். அது ஒரு சமூக ஈடுபாடு, சமூக தரிசனம். கல்வியினால் மட்டுமே நாகரிகம் வளரும். ஆகையினாலேயே இந்த நிகழ்வின் மூலம் கல்விக்கு இன்னோர் புதிய பரிணாமத்தை தந்துள்ளோம். கல்வியின் மூலம் வரலாற்றில் பல நன்மைகளை பதிவிடவேண்டும் .

வடக்கு மாகாணத்துக்கான முழு வரவுசெலவிலே சுமார் 60 சதவீதம் கல்விக்காக நாம் செலவிடுகின்றோம். பல்கலைக்கழகங்கள் மட்டுமல்லாமல் தொழில்சார்ந்த துறைகளிலும் மாணவர்கள் முன்னேற வேண்டும்.

கல்வி ஒரு சேவைக்கான பாதையாக இருக்கவேண்டும். எனவே இந்த முயற்சி அவ்வாறு அமையும் என்று நான் நம்புகின்றேன் – என்றார்.

மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் தங்களது தொழிற்கல்வி திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கமாக இந்தக் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியை முடித்த பின்பு மாணவர்களுக்குப் பயனுள்ள வகையில் தொழிற்கல்வியினை எங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பது தொடர்பிலான விடயங்கள் இந்தக் கையேட்டில் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தேசிய உதைபந்து அணியில் வடக்கைச் சேர்ந்த 7 வீரர்கள்

ஆசியக் கிண்ண தொடருக்காக எதிர்வரும் 20ஆம் திகதி 23 வயது இலங்கை தேசிய அணி பஹ்ரைன் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ள வுள்ளது.


இதற்கான 32 பேர் கொண்ட அணி அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இவ் அணியில் வடக்கைச் சேர்ந்த 07 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இளவாலை யங்கென்றீஸ் அணியை சேர்ந்த யூட் சுமன், தனேஸ், கிரிசாந், குருநகர் பாடும்மீன் அணியை சேர்ந்த கீதன், பள்ளிமுனை சென். லூசியா அணிய்ய சேர்ந்த வில் லியம்சன், பனங்கட்டி கொட்டு சென். ஜோசப் அணியை சேர்ந்த ஜோய் நிதுன், கரணவாய் கொலின்ஸ் அணியை சேர்ந்த சுபாஸ் ஆகிய வீரர்களே இந்த அணியில் இடம் பிடித்துள்ளனர்.

எனினும் சுற்றுப்பயணத்தின் போது 23 வீரர்களே அழைத்து செல்லப் படவுள்ளார் என அறியமுடிகிறது.

(ஐ)

# பிளாஸ்ட் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடுகிறார் டி வில்லியர்ஸ்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி யின் முன்னாள் தலைவரும், அதிரடி துடுப்பாட்ட வீரருமான ஏபி.டி வில்லியர்ஸ், இங்கிலாந்தில் நடை பெறவுள்ள ரி - 20 பிளாஸ்ட் கவுண்டி கிரிக்கெட் தொடரில் விளை யாடுவதற்கு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஐ.பி. எல். தொடரின் பின்னர் சர்வதேச கிரிக்கெட்டி லிருந்து ஓய்வுபெற்ற ஏபி.டி வில்லியர்ஸ், வெளிநாட்டு ரி - 20 லீக் கிரிக்கெட் தொடர் களில் தொடர்ந்தும் விளையாடுவதாக அறிவித்தார்.

இதனடிப்படையில் தற்போது, வெளி நாட்டு ரி - 20 லீக் கிரிக்கெட் தொடர்களில் விளையாட ஆர்வம் காட்டி வந்த ஏபி.டி வில்லியர்ஸ், இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகவுள்ள ரி - 20 பிளாஸ்ட் கவுண்டி கிரிக்கெட் தொட ரில் மிட்ல்செக்ஸ் அணிக்காக விளை யாடு வதற்கு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்.

முதல் ஏழு போட்டிகளில் விளை யாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இவர், மிட்ல்செக்ஸ் அணி வெளியேற்று சுற் றுக்கு தகுதி பெறுமாயின், குறிப்பிட்ட போட்டிகளிலும் விளையாடுவார் என அணி நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

மிடில்செக்ஸ் அணி கடந்த பரு வால போட்டித் தொடரில், 14 போட்டிகளில் விளையாடி 2 போட்டிக ளில் மாத்திரமே வெற்றி பெற்றிருந்த துடன், புள்ளிப்பட்டி யலிலும் இறுதி இடத்தை பிடித்திருந்தது.

இந்த நிலையில் நடப்பு தொடரில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள துடன், ஏபி.டி வில்லியர்ஸ் அணி யில் இணைந் திருப்பது அணியை சற்று வலுப்படுத்தி யுள்ளது.

தென்னாபிரிக்க அணிக்காக 13 வருடங்கள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய வில்லியர்ஸ், ஓய்வு பெறும் போது இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண தொடர் வரை விளை யாடும்படி தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை அவரிடம் கோரியது. ஆனால் அவர் தனது முடிவில் இருந்து மாற வில்லை.

இந்நிலைய்யில் மீண்டும் அணிக்கு திரும்புவீர்களா? உலகக் தொடர் வரை விளையாடியிருக்கலாமே? என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த டி வில்லியர்ஸ்,

அணிக்குத் திரும்புவீர்களா? என்பது பதில் அளிப்பதற்கான கடினமான கேள்வி. மீண்டும் அணிக்குத் திரும்பினால், நண்பர்களுடன் இணைந்து உயர்ந்த திறனில் கிரிக்கெட்டை நாட்டிற்காக விளையாட லாம். இதைத் தவற விடுவது சற்றுக் கடினமாக இருக்கிறது.

ஆனால், ஏராளமான விடயங் களை நான் தவறவிடவில்லை. 90 சதவீதம் விடயங்களை நான் தவற விடவில்லை. சர்வதேசப் போட்டியில் இருந்து நீண்ட தூரம் சென்றுவிட்டேன். உலகக்கிண்ணத் தொடர் என்னை ஒரு கிரிக்கெட் வீரராக வும், மனிதராகவும் வரையறுக்க முடியாது என கூறினார்.

கிரிக்கெட் உலகில் இன்றும் 360 டிகிரி என வர்ணிக்கப்படும் ஏபி.டி வில் லியர்ஸ், சர்வதேச கிரிக்கெட் போட்டிக ளில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், பங்களாதேஷ் பிரிமீயர் லீக், பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர்களில் விளையாடினார்.



# திமுத் கருணாரத்னவுக்கு அடித்தது அதிர்ஷ்டம்



இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்னவுக்கு இந்த வருடம் இங்கிலாந்து பிராந்திய கிரிக்கெட் போட்டி களில் விளையாடுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஹம்ஷயர் பிராந்திய அணியைப் பிரதி நித்துவப்படுத்தி அந்தப் போட்டிகளில் அவர் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, திமுத் கருணாரத்ன தமது அணியில் இணைந்து கொண்டமை மகிழ்ச்சி யளிப்பதாக ஹம்ஷயர் பிராந்திய அணி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரி வித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு தமது கிரிக்கெட் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட முதலாவது வெளிநாட்டுக் கிரிக்கெட் வீரர் திமுத் கருணாரத்ன என அந்த அறிக்கை யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

60 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள திமுத், 8 சதங்கள் மற் றும் 22 அரைச் சதங்களுடன் 4 ஆயிரத்து 74 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

2018 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபையினால் பெயரிடப்பட்ட டெஸ்ட் அணி யில் திமுத் கருணாரத்னவும் உள்ளடக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# அணி தோற்றாலும் அசத்தினார் கெய்ல்!

சுற்றுலா இங்கிலாந்து அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையிலான 4 ஆவது ஒருநாள் சர்வ தேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 29 ஓட்டங்களால் வெற்றி பெற் றது.

கடந்த புதன்கிழமை போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 418 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணி சார்பில் ஜோஸ் பட்லர் 77 பந்துகளை எதிர்கொண்டு 13 நான்கு ஓட்டங்கள், 12 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 150 ஓட்டங்களை அதிகூடு தலாகப் பெற்றுக்கெடுத்தார். அதே நேரம், இயன் மோகன் 88 பந்துகளை எதிர்கொண்டு 103 ஓட்டங்களைப் பெற்றார்.

அதேபோன்று, அலெக்ஸ் ஹலெஸ் 82 ஓட்டங்களையும், ஜொன்னி பெயார்ஸ்டோவ் 56 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். இதன்போது, இங்கிலாந்து தரப்பில் மொத்தமாக 24 ஆறு ஓட்டங்கள் பெறப் பட்டமை சிறப்பம்சமாகும்.

ஒரு நாள் போட்டி வரலாற்றில் ஒரு இன்னிங்சில் பெறப்பட்ட அதிகபட்ச ஆறு ஓட்டங்கள் இவைதான். இதற்கு முன்பு இதே தொடரில் முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் 23 ஆறு ஓட்டங் களை பெற்றமையே சாதனையாக இருந்தது.

இதையடுத்து, 419 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித் தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 48 ஓவர்களில் 389 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கிறிஸ் கெய்ல் 97 பந்துகளில் 11 நான்கு ஓட்டங்கள், 14 ஆறு ஓட்டங்கள் அடங் கலாக 162 ஓட்டங்களை அதிகூடுத லாகப் பெற்றுக்கொடுத்தார்.

இதனூடாக ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 10,000 ஓட்டங் களைக் கடந்த துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலில் கிறிஸ் கெய்லும் இணைந் துள்ளார். இந்தப் போட்டியின் சிறப்பாட் டக்காரராக 150 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்த ஜோஸ் பட்லர் தெரிவு செய் யப்பட்டார்.

(ஐ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் அரசியல் வாழ்க்கைக்கு 30 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் நல்லிணக்கச்செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. காணாமல்போனோர் அலுவலகத்தின் உருவாக்கம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

எனினும், காணாமல்போனோரின் உறவினர்கள் காணாமல் போன தமது சொந்தங்களின் புகைப்படங்களுடன் தற்போதும் வீதியில் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கதறல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

இலங்கை, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுமே கடந்த காலங்களில் ஜனநாயக ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றன. இலங்கை கடந்த காலத்தில் பெரும் அரசியல் நெருக்கடி நிலையை எதிர்கொண்டிருந்தது.

அப்போது மக்கள் வீதிகளில் இறங்கி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு போராடினார்கள். தனியொரு கட்சிக்காகவோ அல்லது தனியொரு நபருக்காகவோ அன்றி நாட்டினுடைய ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் தமது எதிர்கால சந்ததியினருக்காவும் அந்தப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

அத்தகைய போராட்டங்கள் எந்தவொருகட்சியினாலும்ஒழுங்கு செய்யப்படாமல் சிவில் சமூக அமைப்புக்களாலும் இந்நாட்டு மக்களாலுமே ஒருங்கிணைப்பு செய்யப்பட்டன.

இவ்விடயத்தில் நீதித்துறை சுயாதீனமாகவும் நியாயமான முறையிலும் செயற்பட்டு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியது.

எனவே, ஜனநாயக அமைப்புக்களை மேலும் வலுப்படுத்துவதன் ஊடாகவே இருநாடுகளிலுமுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் – என்றார். (ஐ)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 5 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார் .

இதன் போது அவர், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டுள்ளது.

இந்த விசாரணைக்கு பின் அவை இராணுவக் குறிப்பில் பதிவு செய்யப்படும்.

புல்வாமாதாக்குதலைதொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதலில் இந்திய விமானி அபிநந்தன் பாகிஸ்தானில் சிறைப்பிடிக்கப்பட்டார். அவரை விடுவிக்க கோரி இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் பாகிஸ்தானுக்கு அழுத்தம் பிரயோகித்தன.

இதனையடுத்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அபிநந்தனை நல்லெண்ண அடிப்படையில் நேற்று விடுவித்தார்.

## அபிநந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குழுவின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். இதனையடுத்து அவர் இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கப்பட்டார்.

நேற்றுபிற்பகல்வாகாஎல்லை வழியேஅபிநந்தன்இந்தியாதிரும்பினார். இதன்போது அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

அவரை வரவேற்பதற்காக இந்தியமக்கள்வாகாஎல்லையில் கூடிக் காத்திருந்தனர். இந்நிலையில், இந்தக் காத்திருப்பு மகிழ்ச்சி அளிப்பதாகவும், விமானியைத் திருப்பி அனுப்புவதற்கான பாகிஸ்தானின் முடிவு பாராட்டத்தக்கது என்றும் இந்தியக் குடிமகன் ஒருவர் குறிப்பிட்டார்.

விமானியின் விடுதலை முழு இந்தியாவையும் உற்சாகமடைய செய்துள்ளது. அவரது பாதுகாப்பான விடுதலையை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக லக்னோ பிரஜையொருவர் குறிப்பிட்டார்.

இந்திய விமானி அபிநந்தன் வர்தமன்னுடனான வாகனத் தொடரணி நேற்று மாலை வாகா எல்லையை நெருங்கியது.

வாகா எல்லையில் வைத்து விமானப்படை விமானி இந்திய விமானப்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை வரவேற்பதற்காக அரசியல்வாதிகள், பொதுமக்கள் மற்றும் இருநாட்டு ஊடகவியலாளர் கள் பெருந்திரளில் எல்லையில் ஆவலுடன் காத்திருந்தனர்.

## வடக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிவித்துள்ளார்.

மேற்படி தினத்தில் தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களுக்கான விடுமுறையை வழங்குமாறு ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்தினத்துக்கான பதில் பாடசாலை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். (ஐ)

## நிறைவேற்றதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கணேசன் நேற்றுத் தெரிவித்தார்.

ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில்ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தனிநபர்களின் தேவை, விருப்பங்களுக்கமைய ஜனாதிபதி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமாகும். எனவே, அந்த முறைமை தொடர்ந்தும் நீடிக்கவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகியன மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன–என்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்கக்கோரிஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைவுக்கு பொதுஜன பெரமுனவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (ஐ)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறப்பு அறிக்கையாளர் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 40 ஆவது அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே, உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் பியோனாலா நி ஆலோன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, நியாயமான விசாரணை, சித்திரவதை குற்றச்சாட்டுகள், மனிதநேயமற்ற மற்றும் இழிவுபடுத்தும் செயற்பாடுகள், மனித உரிமைகள் மற்றும் சட்டங்களைக் கடுமையாக மீறல்களுக்கான பொறுப்புக் கூறல், சிறுபான்மையின சமூகத்தை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் விலக்குதல் போன்றன குறித்து அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு பயங்கரவாதச் சட்டத்தை விலக்குவதும் அதனை மறுபரிசீலனை செய்வதற்கான அரசின் உறுதிப்பாடு மற்றும் புதிய சட்டத்தை கொண்டுவரும் முயற்சிகளை அவர் வரவேற்றார்.

மேலும் இலங்கை அரசுடன் தனது அலுவலகத்தின் தற்போதைய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும், இலங்கையின் முயற்சிகளுக்கு தனது தொழில்நுட்ப உதவியும் வழங்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## அரசைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மானது அரசைப் பாதுகாக்கும் தரப்பினர்களுக்குக் கொடுக்கும் லஞ்சம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.நகரிலுள்ள அவரது கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது கம்பரலிய திட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதியின் கிராம சக்தி என்னும் திட்டமொன்று உள்ளது. அதே போன்றே பிரதமரின் கிராம எழுச்சித்திட்டமொன்றும் உள்ளது. இந்தக் கிராம எழுச்சித் திட்டம் தான் 'கம்பரலிய' திட்டமாகும்.

இந்தத் திட்டத்தினூடாக அபிவிருத்தி எனும் பெயரில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்த அபிவிருத்திக்கான நிதி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்படுவதில்லை.

அரச தரப்பினர்களுக்கும் அதன் பங்காளிகளுக்கும் குறிப்பாக அரசைப் பாதுகாக்கும் தரப்பினர்களுக்குமேஒதுக்கப்படுகிறது. அதனடிப்படையிலையே தமிழ்த் தரப்பினர்களுக்கும் தற்போது அது ஒதுக்கப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை அரசைப் பாதுகாக்கும் தரப்பினர்களுக்குக் கொடுக்கும் லஞ்சமாகவே அதனை நான் பார்க்கின்றேன்.

ஆனாலும் அந்தத் திட்டத்தினூடாக மக்களுக்குப் பயனுள்ளது என்றால் அதனை நாங்கள் வரவேற்போம். இருந்தும் இந்த நிதி எந்த அடிப்படையில், எவ்வாறு ஒதுக்கப்படுகிறதென்பது தொடர்பில் கொழும்புடன் பேசியிருக்கின்றேன் – என்றார். (ஐ-07)

கழுத்தை அறுக்கும் சைகையைக் காட்டிய

# பிரிகேடியர் பிரியங்கவின் செயலுக்கு இராஜதந்திர விலக்குக் கிடையாது!

## லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் மன்று அறிவிப்பு

லண்டனில் போராட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுக்கும் சைகையைக்காண்பித்துஅச்சுறுத்தல்விடுத்தசெயலானது, இலங்கை இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கடமையுடன் தொடர்புடையதல்ல என்று வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் நீதிமன்ற தலைமை நீதிபதி எமா ஆபத்நொட், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்கு இராஜதந்திர தண்டனை விலக்கு செல்லுபடியாகாது எனவும் நேற்று அறிவித்திருக்கின்றார்.



● 'கழுத்தை அறுக்கும்' சைகையை காண்பித்து புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்யினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்கு இராஜதந்திர தண்டனை விலக்கு இருப்பதாக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தெரிவித்து வந்த நிலையிலேயே லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் இந்த முடிவை அறிவித்திருக்கின்றார்.

## ஜெனீவாவுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடரில், இலங்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர், உயர் மட்டக் குழுவை இங்கிருந்து அனுப்புவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதுஎனவெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தெரிவித்தார்.

ஜெனீவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்ஏ.அசீஸ் மற்றும் அவரது அதிகாரிகளையே இந்த அமர்வைக்கையாளுமாறுவெளிவிவகார அமைச்சினால்அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வலுக்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச நாடுகளின் அழுத்தத்துக்குமத்தியில்இந்தியவிமானி அபிநந்தனை விடுதலை செய்ய பாகிஸ்தான் முடிவு செய்தது.

அமைதிமற்றும்நல்லெண்ண அடிப்படையில் இந்திய விமானப் படை விமானி அபிநந்தன் விடுவிக்கப்படுவார் என்று இம்ரான் கான் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இம்ரான்கான் பேசுகையில், பாகிஸ்தான் ஊடகங்கள் போர் குறித்து எதையும் கூறவில்லை. ஆனால், இந்திய ஊடகங்களால் போர் தூண்டப்படுவது வருத்தமடையச் செய்கிறது.

நாங்கள் மோதலை விரும்பவில்லை என்பதை இந்திய பிரமர் மோடியிடம் தொலைபேசியில் தெரிவிக்க முயற்சித்தேன். ஆனால் முடியவில்லை. பதற்றத்தைத் தணிக்கவேண்டும் என்ற நிலை பயந்துவிட்டோம் எனப் பொருள் கிடையாது. – என்றும் குறிப்பிட்டார்.

இம்ரான்கானின் அறிவிப்புக்கு பாராட்டுக்கள் குவிந்தன. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் உலக நாடுகளில் இருந்து இம்ரான்கானின் நடவடிக்கையை மக்கள் டுவிட்டரில் பாராட்டினர்.

இந்நிலையில் இம்ரான்கானுக்கு அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கவேண்டும் என்று பாகிஸ்தானில் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. பாகிஸ்தானில் சமூக வலைதளங்களில் இது தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகிறது.

இலங்கையர்களும், இம்ரான் கானின் செயற்பாடுகளை சமூக வலைத்தளங்களில் பாராட்டி வருகின்றனர். (ஐ)

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

செம்மணிப் பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் வரவேற்கிறது என்ற வளைவுக்கு அருகிலேயே சிவலிங்கம் நேற்று திடீரென வைக்கப்பட்டது. இதனை யார் வைத்தன என்று தெரியாததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ஐ-07)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதற்கான பிரேரணை முன்வரைவு, 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில், ஜெனீவாவில் உள்ள பேரவையின் உறுப்பு நாடுகள் மத்தியில் நேற்று முன் தினம் உலாவ விடப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசுக்கு, மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் அளிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள பேரவையின் 43 ஆவது கூட்டத்தொடரில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ள இந்த வரைவில், 2021 மார்ச் மாதம், விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து, ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் விரிவான அறிக்கையுடன், பேரவையில் விவாதம் ஒன்று நடத்தப்படும் என்றும் அந்த வரைவில் கூறப்பட்டுள்ளது.

ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் இந்த வரைவில், 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கைக்கு இனியும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் உட்பட பல தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சமந்தா பவரின் உரையை புறக்கணித்தார் மைத்திரி!

## அரங்கில் இருந்து திடீரென வெளியேறினார்!!



கொழும்பு, மார்ச் 02

கொழும்பில் நேற்றுமுன்தினம் இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் உரையாற்ற ஆரம்பிக்க முன்னர், ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அரங்கில் இருந்து திடீரென எழுந்து வெளியேறிச் சென் றார்.

நிதியமைச்சர் மங்கள சமரவீர அரசியல் வாழ்வில் 30 ஆண்டுகளை நிறைவு செய்ததை முன்னிட்டு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நிகழ்வு ஒன்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பா ளராக ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் கலந்து கொண்டார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜ பக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்க, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந் தியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதுவர்கள், முக்கிய இராஜதந்திரிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இதில் சமந்தா பவர் உரையாற் றத் தொடங்க முன்னதாக ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன திடீ ரென எழுந்து வெளியே சென்றுவிட் டார்.


இந்த நிகழ்வில் உரையாற்றிய சமந்தா பவர், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் போது, ஜனநாயக அமைப்புகள் உறுதி யாகச் செயற்பட்ட மையைப் பாராட்டி யிருந்தார்.

அரசியல் குழப் பங்களின் சூத்திரதா ரியான மஹிந்த ராஜபக்ஷ அப்போது முன் வரிசையில் அமர்ந்திருந்தார்.

இலங்கையில் அரசியல் குழப்பங் கள் ஏற்பட்ட போது, சமந்தா பவர் தனது கீச்சகப் பக்கத்தில் ஜனாதிபதி சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷவை விமர்சித்து காட்டமான கருத்துக்களை வெளி யிட்டு வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# பரந்தனில் மரத்துடன் மோதிய சொகுசு பஸ்

## நான்கு பேர் காயம்




யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பஸ் கிளிநொச்சி- பரந்தன் பகுதி யில் நேற்று முன் தினம் இரவு சுமார் 10.30 மணியளவில் விபத்துக்குள்ளானதில் சாரதி உள்ளிட்ட நால்வர் காய மடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான சொகுசு பஸ் பரந்தன் சந்தியை கடக்க முற்பட்டபோது முல்லைத்தீவு வீதியில் இருந்து திடீரென டிப்பர் வாக னம் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கி வீதியில் ஏறியுள் ளது.

இதனால், பஸ் சாரதி வீதியின் மறுபுறத்துக்கு பஸ்ஸைச் செலுத்தி விபத்தைத் தவிர்க்க முற்பட்டார். அப்போது, வீதியின் மறு புறத்தில் இருந்த மரத்துடன் பஸ் மோதி விபத்துக்குள்ளாகியது. விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் போக்குவரத்துப் பொலி ஸார் மேற்கொண்டனர். (ஐ)

# போர்க்குற்றம் சுமத்துவோம்! அரசை எச்சரித்தாராம் பிளேக்

கொழும்பு, மார்ச் 02

அமெரிக்காவின் பேச்சைக் கேட்டுப் போரை நிறுத்தாவிட்டால், போர்க்குற்றச்சாட்டுகளை எதிர் கொள்ளவேண்டியிருக்கும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சராக இருந்த றோஹித போகொல்லாகமவிடம் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் எச்சரித்திருந்தார் என்று தக வல் வெளியிட்டுள்ளார் கலாநிதி மொகான் சமரநாயக்க.

அரசியல் ஆய்வாளரும், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, அவரது ஊடகப் பேச்சாளராகப் பதவி வகித்தவருமான மொகான் சமரநாயக்க கொழும்பில் 'எலிய' அமைப்பினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

இதன்போது, அவர், இலங்கையில் கால் வைப்பதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது. அதற்கான அவர்களின் மூலோபாயத் தின் ஒரு பகுதியாகவே, ஜெனீவாவில் கொண்டு வரப்படும் தீர்மானங்களாகும்.



2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாகப் போரை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் பேச்சைக் கேட்காவிட்டால், போர்க்குற்றச்சாட்டுகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்று கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் வெளிவிவகார அமைச்சராக இருந்த றோஹித பொகொல்லாகமவை எச்சரித்திருந்தார் என்று கூறினார். (ஐ)

# மட்டக்களப்பு–கொழும்பு விமான சேவை ஆரம்பம்!




மட்டக்களப்பு, மார்ச் 02

மட்டக்களப்பு, வவுணதீவு விமான நிலையத்தில்- செரண்டிப் எயார்வேஸ் நிறுவனம் தனது இரண்டாவது உள்நாட்டுப் பயணிகள் விமான சேவையை ஆரம்பித்தது.

இந்த விமான சேவை கொழும்பு-மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கிழக்கு ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் அமீர் அலி , மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள், செரண்டிப் எயார்வேஸ் நிறுவனத் தலைவர் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்த விமான சேவை திங்கள் ,புதன்,வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. (ஐ)

# கடன் திட்டத்தை நீடிப்பதற்கு இணங்கியது நாணய நிதியம்

கொழும்பு, மார்ச் 02

இலங்கைக்கான கடன் திட்டத் தின் காலத்தை நீடிக்கவும் 6 ஆம் கட்ட கொடுப்பனவை வழங்கவும் சர்வ தேச நாணய நிதியம் இணங்கியுள் ளது.

150 கோடி டொலர் கடன் திட்டத் தின் கால வரையறையை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கச் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ள நிலையி லேயே 6 ஆம் கட்டக் கடன் கொடுப்ப னவை வழங்கவும் அவர்கள் இணக் கம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் 150 கோடி டொலர் கடனை மேலும் ஓராண் டுக்கு நீடிக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையி லேயே கடன் திட்டத்தின் கால அளவை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கச் சர்வதேச நாணய நிதியத்தின் அதி காரிகள் இணக்கம் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அர்ஜுனவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



கொழும்பு, மார்ச் 02

போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிரான வழக்கு, மார்ச் 25ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுதாபன தலைமை யகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத் தின்போது, நபர் ஒருவர் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

இந்த வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது கைதுசெய் யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று மன்றில் ஆஜராகியிருந்தார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.